# தமிழிசை

இசையிலக்கியத் திங்களேடு

ஆசிரியர் :

S. R. குப்புசாமி, B A., M. MUS

ஆண்டுச்சந்தா ரூ. 9. தனிப்பிரதி 75 காசு

கீலக ஆண்டு, மாசித் திங்கள்.



## சந்தாதார்களுக்கு ஓர் விண்ணப்பம்

நமது சந்தாதார்களில் சிலர் ஆண்டுச்சந்தாவும் சிலர் அரையாண்டுச்சந்தாவும் அளித்துள்ளார்கள். அரையாண்டுச்சந்தா அளித்துள்ளவர்கள் தங்கள் சந்தாவைப்புதுப்பித்துத் தொகை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இசைக்கென்றே இந்த ஒரேஒரு மாத வெளியீடுதான் நமது நாட்டில் உள்ளது இசைச்சேவையே நமது முழு முதற்கடமை. எனவே பழைய சந்தாதார்கள் புதிய சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்துதவுமாறு வேண்டுகிறோம்.

ஆயுள் சந்தா ரூ. 100 தான். நமது மற்ற இசைவெளியீடுகள் தொடர்ந்துவர இருக்கின்றன. அவை ஆயுள்சந்தாதார்களுக்குத்தான் முதலில் வழங்கப்படும். மீதி இருந்தால்தான் மற்றவர்கட்கு விற்கப்படும். இசையார்வமுள்ளவர்கள் ஆயுள்சந்தாதார்களாகச்சேர்ந்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

'தமிழிசை' மாதமலர்களும் மற்றவெளியீடுகளும் தேவையுள்ளவர்கள் நேரிலோ தபால் மூலமோ நமக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். நமது வெளியீடுகள் அனேகமாய் ஏஜெண்டுகள் மூலம் விற்கப்படமாட்டாது. எனவே தேவையுள்ளவர்கள் நேரிட நமக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

## விளம்பரம் செய்வோர்களுக்கு

தமிழிசை வெளியீடு தொடங்கி ஆறுவெளியீடுகள்தாம் வந்துள்ளன. மாதாமாதம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். நமது நாடெங்கும் ரசிகர்கள் மிகுந்து தமிழிசை மலர்களை ஆதரித்துவருவதை மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இதில் விளம்பரம் செய்வதினுல் நல்ல பயனுண்டு என்பதை நாம் எடுத்துக் காட்டாமலே நேயர்கள் உணர்ந்து கொண்டிருக்கலாம். மேலும் விளம்பர விகிதங்களும் மிகவும் குறைந்ததாகவே இருக்கின்றன. மேலட்டை வெளிப்புரம் ரூ. 150. மேலட்டை உட்புரம் ரூ. 100. சாதாரண முழுப்பக்கம் ரூ. 50. சாதாரண அரைப்பக்கம் ரூ. 25. தொடர்ந்து விளம்பரமளிப்பவர்கட்குச் சலுகையுண்டு. சேலம் திரு. S. V. R. கண்டர் அவர்களும் கோயமுத்தூர் ஆரியவைத்திய பார்மஸி திரு. ராமவாரியரவர்களும் தொடர்ந்து விளம்பரமளித்து ஆதரிப்பது பற்றி மிக்க நன்றி. மற்றவர்களும் விளம்பரம் செய்து நம்மையுமாதரித்து அவரவர்களது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வர் என நம்புகிறோம்.

(ஆசிரியர்)

"தீந்தமிழிசைவல்லார்க்குத் தீதியாதுமிலதே"

# "தமிழிசை"

( இசை இலக்கியத் திங்கள் வெளியீடு )


| துணர் | | மலர் |
| --- | --- | --- |
| 1 | கீலக – தை & மாசி – பிப்பிரவரி - 1969 | 6 |


## தமிழிசையினுள்ளே

செய்திக்குறிப்பு பக்கம்


1. பாடிப்பறை கொண்டு ... ... 5
2. சுரசாகித்தியம் ... ... 8
3. அரிதாச சமயம் ... ... 12
4. ஸௌந்தர்யலஹரீ ... ... 16
5. இசைக்கலைச்சொற்கள் ... ... 21
6. சிலப்பதிகாரம் – இசைத்தொடர் ... ... 25
7. ஸாஹித்யகர்த்தாக்களின் வரலாறு... ... 31

# விண்ணப்பம்

இசைசம்பந்தமான ஆராய்ச்சிக்கட்டுரைகளும் சுவையுள்ள தேவையான கட்டுரைகளும் சங்கத்தமிழ் நூல்களில் மலிந்துள்ள சீரிய இசைக்கருத்துக்களும் நிறைந்த இசைக் கருவூலம் நமது ''தமிழிசை'' வெளியீடு ஒன்றேதான். பூர்வ உருப்படிகள் சுரசாகித்தியமாயிடம்பெறும். இன்னும் ரசிகர்களுக்குத்தேவையான இசைக் கட்டுரைகள் பல தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும்.

இப்பொழுதுள்ள மக்களாட்சியில் நமது சிறந்த பிரதிநிதிகளாகப் பணியாற்றிவரும் மாண்புமிகு கல்வித்துறையமைச்சரவர்களும் இன்னும் கல்வித்துறையதிகாரிகளும், கட்சிச்சார்பறற இலக்கியத்திங்களேடாகிய இத் "தமிழிசையை" க்கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் நூலகங்களிலும் சிபார்சுசெய்து சந்தாச்சேர்த்து ஆவன செய்யக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் கல்வியதிகாரி இந்நூலைச்சில கணிசமான நூலகங்களுக்குச் சந்தாமுறையில் அனுப்புமாறு பணித்துள்ளார்கள்; மற்ற மாவட்ட நூலக அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். அவர்களும் ஆவனசெய்து இதை ஆதரிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சௌந்தர்யலஹரீ, இசை மேதைகளின் வரலாறு, சிலப்பதிகாரம், ஆண்டாள் திருப்பாவை. திவ்வியப்பிரபந்த் இசை, அரிதாசவரலாறு முதலியவை நிரந்தரக்கட்டுரைகள். இனி இசைப்பரிட்சைக்குச் செல்வோர்க்கு வேண்டியவையெல்லாம் சிறந்த கட்டுரை வடிவில் சேர்க்கப்படும். மேலும் தேவாரம், திருவாசகம், திருமுறை முதலியவையளிக்கும் இசைக்கருவூலமும் கூடிய சீக்கிரம் இடம்பெறும்.

ஆண்டுதோறும் சென்னையில் இசைமாநாடுகளும் சர்ச்சைகளும் நடைபெற்றுவருவதை நாமெல்லோரும் அறிவோம். "தமிழிசை" க்கருத்துக்களைப்பண்ணாராய்ச்சி செய்து வருகின்றனர் இப்பேற்பட்ட இசைத்திங்களேடுகளை அவர்கள் வெளியிடவேண்டிய இடத்தில் நாம் துணிந்து இசைச்சேவைபுரிந்து வருகிறோம் அவர்கட்கும் இப்பத்திரிகை அனுப்பப்படுகிறது. இவ்விலக்கியத் திங்களேடு முன்னுக்குவர அப்பெரியார்கள் ஆவன செய்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சங்கீத அகாடமிக்கும் இத்திங்களேடு அனுப்பப்படுகிறது. அவர்களும் இதில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டு ஆவன செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த முறையில் தலைசிறந்த பழம்பெரும் பாடல்கள் சுரசாகித்திய முறையில் வெளிவருவதை அவர்கள் வரவேற்பர் என்று கருதலாமல்லவா!

"தமிழிசை" வெளியீடுகளில் விமர்சனமோ திறனாய்வோ (Criticism) வராது. ஏனென்றால் சர்ச்சைக்கிடமான கட்டுரைகளோ, ஆட்சேபகரமான கருத்துக்களோ, இசைப் பெரியார்களை ஏற்றியிறக்கி எழுதுவதோ நமது நோக்கமல்ல. ஆக்கக்கருத்துக்கள்தாம் இவண் இடம்பெறும். சிலப்பதிகாரத்தைத்தவிர பெருங்கதை, மணிமேகலை போன்ற சங்க இலக்கியங்களில் மலிந்துள்ள இசைக்கருத்துக்களும் இனி கட்டுரைகளாகச் சேர்க்கப்படும்.

அடுத்த இதழிலிருந்து ஸாஹித்யம் வளர்ந்தவரலாறும் ஸாஹித்ய கர்த்தாக்களின் வரலாறும் தொடர்ந்து வெளிவரும். பொதுமக்களின் ஆதரவையும் பேருதவியையும் நன்றியுடன் எதிர்பார்த்து ஏற்றுக்கொள்ளுவோம்.

(ஆசிரியர்)

# அறிவுசோதி மறையுமா, வசிக்குமா?

அறிஞர் அண்ணாவின் அகாலமரணம் தமிழகமக்களை ஆழ்ந்த துக்கக்கடலில் ஆழ்த்திவிட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவராக அவர் இருந்தகாலம் முதல் அவரிடம் தொடர்பு கொண்டவன் நான். கல்லூரி விளையாட்டுகளில் இருவரும் பங்கு கொண்டிருக்கிறோம். காலஞ் சென்ற M. K. ரங்காச்சாரியாரின் தனிப்பயிற்சிக் கல்லூரியிலும் ஒருங்கே பணியாற்றிய வாய்ப்பையும் பெற்றவர்கள். ஆனால் அவர் அரசியலில் ஈடுபட்டபிறகு அவரைக்காணும் சந்தர்ப்பம் குறைந்து விட்டது.

முதலமைச்சர் பதவியேற்று பிறகு கோவை வந்த பொழுது ஒரு சந்தர்ப்பத்தில் அவரைக்காணும் வாய்ப்புப் பெற்றேன். நமது "தமிழிசை" மலர் வருவதாகவும் அமெரிக்கா சென்றுவிட்டுவந்த பிறகு ஆவன செய்வதாகவும் கூறினர். ஆனால் தீராத கடும் நோய் அவரை விழுங்கி விட்டது.

சமரச நோக்கோடும் கனிந்த உள்ளத்தோடும் அண்டியவர்களை நோக்குவார். கல்லூரியில் ஆங்கிலப்பாடம் போதிக்கும்பொழுது "At his approach, despair and anguish fled the struggling soul" என்ற கிரேயின் (Grey) செய்யுளை வெகு அழகாக அனுபவித்துப்போதிப்பார். அவரைக்காணும் பொழுதெல்லாம் நமது தீவிரக்கருத்துகளுக்கெல்லாம் (serious thoughts) முடிவு காண்போம் என்ற ஊக்கம் நம்மைச்சாந்தப்படுத்தும். இனி அப்பேற்பட்ட ஆறுதல் கூற, அண்ணாவைப்போன்றவர்களை இவ்வையகத்தில் காண்போமா? ஏன், காண்போம். அவர் நமது உள்ளக் கோயில்களில் குடிகொண்டுவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையை வேண்டுகின்றோம். அவரது குடும்பத்தாரின் ஆராத்துயரத்தில் பங்கு கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்

# "பாடிப் பறை கொண்டு"

இந்த எட்டாவது திருப்பாவையில், எல்லோரும் பகவானுடைய நாம சங்கீர்த்தனம் பண்ணுவதையே சிறந்த நோன்பாகக் கொண்டு அவன் பக்கல் சென்று சேவித்தால், நமது குறைகளையாராய்ந்து பகவானே ஆவன செய்வான் என்று கோதையார் விளக்குகின்றார். தாம் பெற்ற பேற்றைத் தம்மொத்த அரிவையரும் பெற்று ஆனந்திக்க வேண்டுமென்று அவர்களை எழுப்பிக் கிருஷ்ண கானத்திலீடுபடும்படி வேண்டுகின்றார் "பறை கொண்டு" என்ற சொல்லுகிறபடியால் பகவானது திருக கல்யாண குணங்களைப் பாடுவதையே தலை சிறந்த புருஷார்த்தம் என்று எடுத்துக்காட்டுகின்றார். இன்னும் சில வரி வுரையாளர்கள் "பறை கொண்டு" என்பதற்கு "வீணை முதலிய வாத் தியங்களையெடுத்துக் கொண்டு" என்று விளக்கம் தந்திருக்கின்றனர். (கும்பகோணம் பாடராச்சாரியார்களும் தாத்தாச்சாரியார்களும் 8—1—1912 இல் வெளியிட்ட பதிப்பு - பக்கம் 102) இந்த நாள் கழிந்துவிட்டால், மறுபடியும் அவனைப் பாட நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமோ? எனவே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டு மெனபதைக் கோதையார் வலியுறுத்துகின்றார். அக்காலத்திலேயே வாத்தியஙகளோடு கூடிய பாட்டு இருந்திருக்கிறதென்று தெரிகிறது.

வேதகாலத்திலேயே யாகயக்ஞங்கள் செய்யும்பொழுது, கர்த்தா மந்திரங்களைப் பாடவேண்டுமென்றும் அவனது மனைவி உப கானமாக வீணை வாசிக்க வேண்டுமெனறும் கூறப்பட்டிருக்கிறது வைதிகச் சடங்குகள் பெரும்பாலானவற்றில் மனைவிக்குச் சமபங்கு உண்டு; சிலவற்றில் அவளில்லையெனறால் சடங்கே நடைபெறுது. எனவே இக்கருததை நம் கோதையகும இப்பாடலில் வலியுறுதது கிறார். "அவன் குணங்களைப் பாடியேனும் என் ஆவியைக்காப்பேன்" எனறு பறை சாற்றுகிறார். அவன் நாமங்களையும் திருக்கல்யாண குணங்களையும் பாடிப்பாடிக்களிப்படைகிறார். நம்மையும் அப்பாதை யிலேயே ஈடுபடச் செய்கின்றார். "அன்பின் வழியது உயிர்நிலை" என்ற பொய்யாமொழியாரின் வாக்கிற்கிணங்கி, அனபு முதிர்ந்து, கனிந்து ஞானம் பெற்று இறையைக்காண விழைகின்றது இவரது இசை மூலம் வெளிப்படுத்தப்பட்ட உள்ளன்பில் இறைவன் ஈடுபடு

கிறன்; அடியார் தம்மடியாராகிறன். பிரதிவாதி பயங்கரம் அண்ணன் "சேதனனை இருளாலே திருத்தும்; ஈச்வரனை அழகாலே திருத்தும்" என்று கூறிப்போந்தார். அஞ்ஞானத்தில் ஆழ்ந்துள்ள நம் போன்றவர்களுக்கு இசை மூலம் இறையறிவையூட்டி இறையோடு கலந்து இன்பம் துய்க்கச் செய்கின்றார். திருப்பாவையை ஒரு பெரியார் "அஞ்ஞான மயக்கங்களுக்கு மருந்து" என்று மிக அழகாகப் போற்றியுள்ளார். எம்பெருமான கல்யாண குணங்களைப் பாடிப்பாடி அவனன்பில் தோய்ந்து, மற்றவர்களும் அவனையடைதற்பொருட்டு எல்லோரையும் இசைச் சேவையிலீடுபடக் கோதையார் அழைக்கின்றார். வாயால் பாடுவதோடு வாச்சியங்களிலும் வாசித்து இறைவனோடு இரண்டறக்கலத்தற்கேற்றவாறு வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ள வழி கோலுகிறார்.

இன்னிசைப்பாக்கள் மூலம் அவனை வாயாரப்பாடி கைங்கர்யம் செய்து அவனை இன்புறச் செய்து அதனால் தாமுமின்புற்று பிரபந்நராகிறார் கோதையார். இவரது இன்னிசைப் பாக்கள் வாழ்க்கையைப் பண்படுத்துகிறது; உயிரைத்தூய்மையாக்குகின்றது இவரது இசைப் பாடல்களின் சக்திதான் எத்துணையாயது? இலக்கண இலக்கியங்களினிருப்பிடம்; தமிழுக்குத்தாயகம்; பக்தியையூட்டும் புதையல். ஆனால் மற்ற ஆழ்வார்களைப்போல் உபதேசம் செய்வதோடு நின்று விடாமல் தாமே போந்து எல்லோரையும் அஞ்ஞானத்துயிலெழுப்பி "சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்று எம்பெருமானிடம் கொண்டு போய்ச் சேர்த்தும் பேரின்பத்தையனுபவிக்கச் செய்கிறார். அதோடு இவர் நின்றுவிடவில்லை. "உம்பர்கோமானே! உறங்காது எழுந்திராய்" என்று அவனையும் துயிலெழுப்புகிறார் மற்றவர்களுக்கு மயர்வு அறமதி நலமளிக்கும் இறைவனுக்கே இவர் மயர்வு அறமதி நலமளிக்கின்றார் பாருங்கள். அதனால தான் பெரிய வாச்சான் பிள்ளை இவரை, மற்ற ஆழ்வார்களை விடச்சிறந்தவர் என்று கூறிப் பெருமை பாராட்டுகிறார்.

பகவானை நாமசங்கீர்த்தனம் செய்வதை நம் கோதையார் ஒவ்வொரு பாடலிலும் வெகு அழகாக எடுத்துக்காட்டுகிறார். "பஞ்சவர்கதுத்தூது நடந்தவனை ஏத்தாத நாவென்ன நாவே! நாராயணா வென்னா நாவென்ன நாவே" என ஆய்ச்சியர்கள் மதுரையில் குரவையாடும்பொழுது நாரணனை நாபாட வேண்டும்; கல்யாண குணங்களைப் பாடவேண்டும், என்பது பெறப்படுகின்றது. நாச்சியார் திருமொழியில் "மாலினவரவு சொல்லி மருள்பாடுதல் மெய்மை கொலோ! என்று எம்பெருமான் வரவைக்கரிக்குருவிகள் மருள் என்ற பண்ணைப் பாடியறிவித்தன என்று விளக்குகின்றார். கண்ணனுடைய செயல்களெல்லாம் இவர் மனக்கண்ணிற்குக் காட்சியளிக்கின்றன. இவரும்

அவற்றை ரசித்துப்பாடிப் புகழ்கிறார் மற்றவர்களையும் இறையன்பைப் பாட அழைக்கிறார். என்னதன்னலமற்ற பெருங்குணம் பாருங்கள்!

நம்பண்டைத்தமிழ் மக்கள் எல்லாக்கலைகளையும் உயிரோடு கலந்து இன்பந்துய்த்தனர். இசை போன்ற நுண்கலைகளை வளர்த்துப் புறமனத்தையொடுக்கி அகமனத்தை ஒளிரச் செய்தனர். அவர்கள் பேணிவளர்த்த கலைகள் யாவும் மக்களது அறிவையும் அன்பையும் பெருக்கியது. இறையை இன்னிசைப் பாக்களால் அடையச் செய்தது. கோதையாருடைய பாடல்களில் இசை இலக்கணம் வழுவாது எங்கும் பரிணமித்துள்ளது. யமகம், திரிவு முதலிய சொல்லணிகள் இன்னும் நாகபந்தம் முதலிய சித்திர கவிகள் புனைவதிலேயே நின்று விடாமல் ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு மணியாகத் திகழவைத்துள்ளார் எல்லாப்பாக்களுமே இனிய மதுரகவியாகும். இம் மாதிரி இவர் இசைத்தொண்டாற்ற, இறைவனின்னருளேதான் காரணமாகும். இவரது உவமையணிகள் தனி உருவத்தையும் உயிரையும் பெற்று பாரதந்திரிய நிலையையும் இறைவனருளையும் காட்டா நிற்கின்றன. எல்லா மெய்யடியார்களும் இசைபாடிப் பேறுபெற்றதையுணர்ந்த கோதையாரும் தம் நூல்களை இன்னிசைப்பாக்களாக்கித் தாமும்பாடி மற்றவர்களையும் பாடவைத்து இறைக்குக் கைங்கர்யம் செய்கின்றார். இவரது திருவாயிலிருந்து வரும சொற்களெல்லாம் எம்பெருமானது கல்யாண குணங்களைப் போற்றும் பண்களாகும். அவனை அடையவும் அதுவே வழித்துணையாகின்றது. எனவே நம் கோதையர் இசையில் இயைந்து நின்று தாமடைந்த இன்ப நிலையை எல்லோருமடையும்படி செய்துள்ளார்.

நம்மை பக்திப் பாதையில் இசையால் எவ்வாறு அழைத்துச் செல்கிறார் கோதையார் பாருங்கள். புறமனத்தைக் குவியவைத்து அகமனதை அலரும்படி செய்து இறைவனிடம் இன்னிசைப் பாக்கள் மூலம் அழைத்துச் செல்கிறார். இதனால் தெய்வ அருளில நிலைத்திருகக முடியும். சீவான்மாவைப் பரமான்மாவோடு சேர்த்து வைப்பதற்குக் கோதையாரின் இசைப்பாக்களே கைகண்ட மருந்து. இவரது சீரிய இசையொடு கலந்த இறையன்புதான இவரை எம்பெருமானோடு இரண்டறக்கலந்த நிலையை அடைவிக்கின்றது. நம்பாவைச் செல்வியார் எம்பெருமானிடம் கொண்ட அன்பை – நம்மையும் அவனை அடையும்படி செய்யும் அன்பை – அவனிடக்கரத்திலுள்ள சங்கை விழைவதன் மூலம் வெளிப்படுத்துகிறார் – "மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையையும் நாற்றமும விருப்புற்றுக் கேட்கினறேன் சொல்லாழிவெண சங்கே."

--oOo--

# சுரசாகித்தியப் பகுதி

## சுப்பராய சாஸ்திரிகளின் க்ருதி - யதுகுலகாம்போதி - சாபு

சங்கீத உலகில் மும்மூர்த்திகள் என்று புகழ் பெற்றவர்களில் ஒருவரான சியாமசாஸ்திரியின் புதல்வர் சுப்பராய சாஸ்திரி (1803 – 1862) முதலில் தகப்பனரிடத்திலும் பிறகு தியாகையாவிடமும் இசைப்பயிற்சி பெற்று மும்மணிகளையும்விட அதிகக்கியாதி பெற்றவர். தஞ்சை காமாக்ஷியம்மனிடம் உள்ளன்பு கொண்டவர். நிகரற்ற முறையில் ''குமார'' என்ற முத்திரையும் அனுபல்லவிக்குப் பிறகு சிட்டை சுரமும் சரணத்திற்குப் பிறகு சிட்டை சுரத்தின் சாகித்தியமுமாக அனேகப் பாடல்களை இயற்றியிருக்கிறார். (இவரது விரிவான சரித்திரம் பிறகு சாகித்தியகர்த்தாக்களின் வரலாற்றில் விரிக்கப்படும்.) இவரது ஒவ்வொரு பாடலும் ஒப்புயர்வற்றவை இவருடைய முதிர்ந்த ஞானமும் இசைத்திறமும் ஒவ்வொரு பாடலிலும் சுவையொடு திகழ்கின்றன. மத்யமகாலசாகித்தியம், சுரசாகித்தியம், சிட்டை சுரம் முதலியவையமைப்பதில் ஈடுமிணையுமில்லாதவர் என பது மிகையாகாது. எனவே இவரது ஒவ்வொருபாடலும் இணையற்ற இசைக் கருவூலமாம்.

### யதுகுலகாம்போதி – சாபு

பல்லவி

நின்று சேவிஞ்சின ஜனுலகு இகயீஜனன பாதலுகலவே

அனுபல்லவி

கனகாங்கி ஸ்ரீ ருக்மிணீ ஹ்ருதயாப் ஜதினமணே பார்த்தசாரதிசாமி.

சரணம்

பவசாகர தாரகமையுன்னதி நீபத சாரசயுகமமு
புவி மானவலோ குலகுபுக்தி முக்திப் ரதமு நீபதமு
பவசன்னுத நீது நாமஜனசதா சேயுசுன்ன
கவிஜனவனலோல நீசரி கலதவேல் புகுமார பூஜிதபாத

பொதுப்பொருள்:—

பார்த்தசாரதியாகிய கிருஷ்ணனைத் துதிக்கும் பாடல் ருக்மிணியோடு கூடிய கிருஷ்ணனைத் தான் துதிக்கிறார். சம்சாரம் என்ற கடலைக் கடக்க ஸ்ரீ கிருஷ்ண பகவானின் பாதாரவிந்தம் தாரக மந்திரமாகப் பயன்படுகிறது. பூமியில் பிறந்தவர்கள் அவனையே சிந்தையில் கொள்வார்களானால் புக்தி, முக்தி முதலியவற்றை வரையாது வழங்குவான். அவனது நாமசங்கீர்த்தனம் எப்பொழுதும் செய்து இகபர சுகத்தைப் பெறலாம். "உன்னையே எப்பொழுதும் சிந்தையிற்கொண்டு நாமசங்கீர்த்தனம் பண்ணுகிறேன். உனது தாமரைத்தாள் என் மனதிலே ஆழ்ந்துள்ளது. நீ கருணைக்கடலல்லவா! எனவே கிருபை கூர்ந்து எனபாலிரங்கிக்காப்பாற்றுவாயாக" என விழைஞ்சுகின்றார் சுப்பராய சாஸ்திரிகள். மிகவும் உருக்கமான பாடல் மனதைப் பிணித்துக் குழைக்கும் தன்மையது.

••oOo••

## யது குலகாம்போதி - சாபுதாளம்

| | 1 3 | 0 2 | 0 2 | 1 3 | 0 2 | 0 2 |
|---|---|---|---|---|---|---|
| பல்லவி | | | | | | |
| | , சரி | ரிப | மா | ரீ,மபா | பா | மா |
| | நின் | னு | ஸே | விஞ் | சி | ன |
| | , மபத | தநி | தப | தபம | ரிக | சா |
| | ஜ | னு | லகு | இ | க | யீ |
| 2) | , சரி | ரிமபா | பமமா | ... | ... | ... |
| | நின் | னு | ஸே | — | ... | ... |
| 3) | , சரி | ரிமபாதப | பமமா | ... | ... | — |
| | நின் | னு | ஸே | — | — | ... |
| 4) | ... | ... | ... | ரீ,மபா | மபதச் | தபமரி |
| | ... | ... | ... | விஞ் | சி | ன |
| | , சநிபா | தா | சா | சரிம | மக | சா |
| | ஜன | ன | பா | தலு | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2) , சநிரிசநித | பத | சா | ... | ... | ... |
| ஜன | ள | பா | ... | ... | ... |

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| , மக | பத | ச்ா | தச்நி | நித | பா |
| கன | காங் | கி | ஸ்ரீருக் | மி | ணி |
| , ச்ச்நிதா | நித | பா | , மக | பத | சா் |
| ஹ்ருத | யா | ப்ஜ | தின | ம | ேனா |
| , பா.தசா் | நித | பா | மகரீ, | ரிக | ச.ா் |
| பார்த் | த | சா | ரதி | சா | மி |

சிட்டை சுரமும் அதன சாகித்தியமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சா, | ; | ரீ | , மா | பா | நீ |
| ரா | ; | ரா | நின் | னு | ஸ |
| தா, | ; | பா | ; | மக | ரிக |
| தா | ... | கோ | ... | ரிதி | வினு |
| சா, | ; | ரீ | , மா | பா | நீ |
| ரா | ; | ரா | நின் | னு | ஸ |
| தா, | பா | நித | ப்நித | பம | கரி |
| தா | கோ | ரிதி | னிமன | விவி | னுமு |
| சாரி | சரி | மா | பமப | தா | பத |
| ஸார | ஸத | ளா | க்ஷசர | ஞ | கத |
| ரிசர் | ; | மப | தபா | . ம | கரி |
| ஜஞ | ; | வன | க்ருபா | நி | திவி |

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சசா | தம | தா | தபா | பா | பம |
| பவ | சா | ... | கர | தா | ... |
| பதச் | தப | பம | மக்ரி | ரிக | சா |
| ரக | மை | யுன் | னதீ | நீ | ... |
| பதா | சா | ; | சரிம | மா | பா |
| பத | சா | ; | ரச | யுக் | ம |
| பமகா; | மகரீ | ; | சா, | ; | ; |
| மு | ... | ... | ... | ... | ... |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,மக | ரிக | சா | சரிம | மா | மா |
| பு | ளி | மா | ... | ன | வ |
| ரீ.மபா | பா | தபமா | பதா | பா | ; |
| லோ | ... | ... | குல | கு | ; |
| ,மக | சரி | மா | ரீ,மபா | பா | பப |
| புக் | தி | ஒ | முக்தி | ப்ர | த |
| ,தபா | தபமக | மா | மகரீ , | ரிக | சா |
| மு | ... | நீ | ப | த | மு |
| ,மகரி | ரிக | சா | ,சரி | மா | மா |
| ப | வ | சன் | ... | னு | த |
| .ரிம | பா | பா | பாதா | பா | ; |
| நீ | -- | து | நா | ம | ; |
| ,மச | பத | சர் | ,நித | பா | ; |
| ப | ஜ | ன | ச | தா | ; |
| , பா,தசர் | ஸ்நிதா | நிதபா | தபா | மச | மா |
| ஜே | யு | ... | சு | ன் | ன |
| , மப | தச் | நித | மபத | சர் | சர் |
| க | வி | ஜ௫ | வ | ... | ன |
| , ச்நித | நித | பா | நிதப | தபமக | மா |
| லோ | ல | . | நீ | ச | ரி |
| , பமபா | தச் | நித | மா, | பத | சர் |
| கல | தா | | வேல் | பு | |
| , பதச் | பா | மக | மகரீ | ரிக | சா |
| குமா | ர | பூ | ஜித | பா | த |

ராகலக்ஷணம் :—

சரிமபதச் — ச்நிதபமகரிச — ஹரிகாம் போதியில் ஜன்யம் சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம சற்று அழுத்தமான சுத்தமத்யமம, த்ரிஸ்ருதிதைவதம். சற்று தீர்ககமானகைசிகநிஷாதம் சங்ககாலத தமிழிசை நூலகளில் இதைப் பழந்தககராகம என்று குறிப்பிட்டுள்ளனர். பக்தி வாத்ஸல்யம, ஸ்ருங்காரம் முதலிய ரஸங்களுக கேற்ற ராகம் ராத்திரி முன்யாமத்தில பாடவேண்டியராகம். ஆழ்வார்களின பாடலகளிலும நாயனமார்களின பாடல்களிலும இந்த ராகம் விரவி வந்திருககிறது

**N. B** அனுபல்லவிக்குப்பிறகு சிட்டை சுரமும் சரணத்திற்குப் பிறகு சிட்டைசுரத்தின் சாகித்யமும் பாட வேண்டும்

# அரிதாச சமயம்

## நரஹரிதீர்த்தர்

நரஹரிதீர்த்தரிலிருந்து ஆரம்பித்து (1331 கி. பி.) பால கிருஷ்ண விட்டலர் (கி. பி. 1910) வரை ஏராளமான பஜனுவளிகளை யும் தேவர் நாமாக்களையும் இசைபாடல்களாக ஆக்கிய சுமார் 65 தாஸர்களைப்பற்றி விவரம் கிடைத்திருக்கிறது அவர்களின் பெயர் களுள் தீக்ஷா நாமங்களும் பாடல்களில் வரும் அங்கிதங்களும் (signature) கிடைத்துள்ளன. இசையைப்பேணி வளர்த்த பெரியார் களின் சரித்திரமும் இசைத்தொண்டும் இவண் இடம் பெறும் அதிக விவரம் கிடைக்காத சிலர் வரலாற்றை ஒதுக்கி விடவேண்டி யிருக்கின்றது.

நரஹரிதீர்த்தர் :—

இவர்தான் ஹரிதாஸர்களில் முக்கியமானவர்; முதன்மையான வர். இவர் ஆசார்யபரம்பரையில் பத்மநாப தீர்த்தருக்குப் பிறகு பட் டம் பெற்றவராவர். இதற்கு முன இவர் கஞ்ஜம் ஜில்லாவில் டப்டர் தாராக (Accountant General) வேலை பார்த்துப் புகழ் பெற்றவர். பதரியாத்திரையிலிருந்து மத்துவாச்சாரியார் திரும்பிவந்து கஞ்ஜத் தில் முகாமிட்டிருந்தபொழுது நரஹரிதீர்த்தர் சீடரானுர். இவரது பூர்வாச்ரமப்பெயர் ச்யாமசாஸ்திரி) ஒரிஸா அரசனது கஜனுவில் (treasury) இருந்த ராமஸீதா விக்கிரஹங்களை மத்துவாசாரியார் பூஜை செய்வதற்காகக் கேட்டார். கொஞ்சகாலங்கழித்து நரஹரி தீர்ததரது சேவையைப் பாராட்டி ஷை விக்கிரஹங்களை அரசன் அவ ருக்கு வழங்கினுன். உடனே அவற்றை எடுத்துக் கொண்டு நரஹரி தீர்த்தர் உடுபியில் முகாமிட்டிருந்த மத்துவாச்சாரியாரிடம் ஷை விக் கிரஹங்களையளிததார் அவை இரண்டும் இன்னும் மந்த்ராலயத் திலும் உத்தராதி மடத்திலும் பூஜை செய்யப்பட்டுவருகிறது.

நரஹரிதீர்த்தர் கஞ்ஜத்தில் அரசராக இருந்ததாகச் சரித்திர வாயிலாக அறிகிறோம் (Vide மத்துவவிஜயம் VI p. 33 and பண்டர்

காரின் தொகுப்பு வெளியீடு IV p 82). மத்துவருடைய சீடரான பிறகு ஸ்ரீ ரகுகுலதிலகர் or ரகுபதி என்ற தீக்ஷாநாமத்தைப் பெற்றூராம். இவர் கன்னட மொழியில் சிறந்த பாண்டித்தியமுள்ளவர்' இவர் பல பாடல்களைக் கன்னடத்தில் இயற்றியுள்ளார். ஆனால் பெரும்பாலானவை கால வெள்ளத்தில் மறைந்து விட்டன. மிகச் சில பாடல்களேதான் கிடைத்துள்ளன. அதிலும் இரண்டு பாடல்கள் பிராபல்யமடைந்திருக்கின்றன. நமக்குக்கிடைத்திருக்கும் பாடல்களின் மாத்ருகை சுத்தநகல் (original) அல்ல. பல மாறுதல்களையடைந்து (interpolations) நமக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே இவற்றின் சுத்தம் (accuracy) சந்தேகத்திற்கிடமானது.

இவருடைய பாடல்கள் கன்னட மொழியிலுள்ளன மிகவும் உருக்கமானவை. இசைச் சுவை, சொற்சுவை, பொருட்சுவை, லய நயம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவை. ''ரகுகுலதிலக'' என்ற அங்கிதத்தையுடையவை. அவரது வாழ்க்கையில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் நிறைந்துள்ளன ஆனால் அவற்றை இங்கு விரிப்பது நமது நோக்கமல்ல. இசைச் சேவையைப் பற்றி விளக்குவதே முதற்கடமை. பலவித அபராதங்களைச் செய்து அவற்றிற்காகத் தம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறூர். பச்சாத்தாபப்படுகிறூர்; மனமுறுகிப்பாடுகிறூர். ''சம்சாரக்கடலில் எவ்வளவு ஆழம் ஆழ்ந்து விட்டேன்! பேருக்கு மாத்திரம் நான் அரிதாசனே தவிர அனுபவத்தில் உலகச்சிற்றின்ப தாசன் நாலுபேரைக் கண்டால் இறைதத்துவத்தில் இறங்கிவிடுகிறேன். ஆனால் தனிமையாயிருக்கும் பொழுது பொருளாசை வாட்டுகிறது. நல்ல காரியங்களில் ஒருபைசா செலவிட்டாலும் அதைப் பெரிதாய் எண்ணுகிறேன்; ஆனால் தீயவற்றில் பெரும்பொருளைச் செலவு செய்து விட்டாலுங் கூட, அது பெரிதாகத் தோன்றவில்லை. நல்ல காரியங்கள செய்வதில் சோர்வும் தீயவை செய்வதில் ஊக்கமும் உள்ளவனுய் விட்டேன்'' என்று தனது குற்றங்களையெல்லாம் உள்ளது உள்ளபடி இறைவனிடம் முறையிடுகிறூர். மனது பக்குவமடையும்பொழுது கருத்துக்களும் முதிர்ச்சியடைகின்றன. தன் குற்றத்தையுணர்வது முக்கியமான ஒரு பண்பு. அப்பொழுதுதான் குற்றத்தின் நிலையே உணர முடியும்.

இறைவனிடம் ஆழ்ந்த பக்தி ஏற்பட ஏற்படப் பண்பாடுகளும் விரிவடையும்; உயர்நோக்குள்ளதாகவும் திருந்தும். இறையன்பர்கள் காணும் தத்துவம் இதுவே தாங்கள் காண்பதோடு நின்றுவிடாமல் ஏனையோர்களிடமும் இப்பண்பாடு வேரூன்ற விழைகின்றூர் அடியார். மனோநிலை பக்குவமடைய அடைய பச்சாதாபம (repentance) அதிகரிக்கிறது. குற்றங்கள் மலையாகத் தென்படுகின்றன. அவற்றைச்

செய்து விட்டதற்குத் தன்னையே நொந்து கொள்ளுகிறார். இப்படியே மிகவும் உருக்கமாகப் பாடிக்கொண்டே சென்றார் நரஹரிதீர்த்தர்.

"இடுக்கண்கள் ஓர் உலக ரூபத்தை அடையுமானால், நான் தான் அதில் ஏகபோகமாய் வசிக்கத் தகுந்தவன். என்னைச்சேர்ந்தவர்களை (குறிப்பாக எனது மனைவியை) யாராவது குறைவாகப் பேசிவிட்டால் மூக்குக்குமேல் எனக்குக் கோபம் வந்துவிடுகின்றது; ஆனால் இறைவனைப் பழித்தார்களேயானால் பெருமிதம் கொள்ளுகிறேன். என்ன அவல நிலை பாருங்கள்! இதற்கு விடிவுகாலம் ஏற்படுமோ!" என்றெல்லாம் கதறுகிறார். இந்தப் பாடல்களில் சோகரசமும் அதற்கேற்ற இராக பாவமும் பரிமளித்து மிளிர்கின்றது. ரயில் முதலில் புறப்படும் பொழுது மெதுவாகவும், போகப்போக வேகம் அதிகரிப்பது போல அரிதாசரின் கருத்துக்களும் படிப்படியாக எழும்பி உச்ச நிலையை அடைகின்றன. அவை உச்சநிலையை அடைய அடைய தாசரது பக்குவமும் மகோன்னத நிலையையெய்துகின்றது. இசையின இனிமையும் பாவமும் மிகவும் உருக்கமான நிலையை அடைந்து கேட்போருள்ளத்தையும் கனிவிக்கின்றது.

அடுத்த பாடலில் என்ன விரக்திதளும்புகிறது பாருங்கள்! "எதற்காக நான் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும்? எனது பெண்டு பிள்ளைகள் யார்? எனது குற்றங்களுக்காக என்னுடன் பங்கு கொள்ளுவார்களா? இதற்கு விடையும் எனக்கே நன்றாய்த் தெரியும். இருந்தும் என்மனம் அவர்களை நாடி, அவர்களுக்காக உழைத்துப் பித்தலாட்டங்கள் செய்து பொருட்களைச் சம்பாதித்து வைக்க விழைகின்றதே! ஏ அரியே, கருணாமூர்த்தியே, நீ நினைத்து என்னிடம் கொஞ்சம் கடைக் கண் பார்வையைச் செலுத்துவாயேயானால், இதெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடும். காலங்கடத்தாமல் அந்த நாள் இன்றே வந்து விட்டால நலம என்பதே எனது வேண்டுகோள்" என்று தாசர் முறையிடுகிறார். "உலக்கு அனாதரக்ஷகன் ஆபத்பாந்தவன் என்ற பெயர்களையெல்லாம் சூட்டி மெய்யடியார்கள போற்றுகின்றனரே. பக்தவத்ஸலன என்று கோஷிக்கின்றார்களே. சொல்லொணாக் கொடுமைகளினின்றும் பிரகலாதனைக்காப்பாற்றவில்லையா! அவன்தான் உனது உறவினனா? நானில்லையா? குற்றம் புரிந்த அகலியைக்கு அருள் புரிந்தாயே. அதற்காக அவள் உனக்குக் கொடுத்ததை நான் கொடுக்காது விட்டுவிட்டேனா? ஏன் இந்தத் தாமதம்?" என்று அதிக உரிமை பாராட்டிக் கொண்டு பாடுகின்றார் தாசர்.

இவ்விடம் ஓர் வழிப்பேறு (digression) 'ஏபனிகோஜன் மிஞ்சிதினனி' என்ற பாடலில் மிகவும் உயர்ந்த கருத்தைத் தியாகையா வெளி

யிட்டிருக்கிறார். "வால்மீகி போன்ற வரகவிகள் இராமனை உயர்ந்த முறையில் பாடிவிட்டார்கள். அவர்களைப்போல் உன்னால் உயர்ந்த முறையில் பாட இயலுமா? என்று என்னைக் கேட்கின்றாயா? வால்மீகி பாடினால் அவரது பக்தியை வெளிப்படுத்தியதாக ஆகும். அவர் சாப்பிட்டால் அவர் வயிறுதானே நிரம்பும். என்வயிறு நிரம்புமா? ஆகையினால் எனது பத்தியைத் தெரிவிக்க நானும் என்னாலியன்ற அளவு பாடவேண்டாமா? வால்மீகாதிமுனுலு நின்று நன்று வர்ணிஞ்சி நாயாசதீருனு (வால்மீகி உன்னை நன்றாகப்பாடிவிட்டாரென்றால் எனதாசை தீர்ந்து விடுமா?) என்று பொருள்படும்படி மிகவும் உருக்கமாகப் பாடியுள்ளார். நரஹரிதீர்த்தரும் இறைவனிடம் உரிமை பாராட்டி, தன்குற்றங்களைத் தெரிவித்து, அவற்றிற்காகத் தன்னை மன்னித்து ஆட்கொள்ளும்படி இறைஞ்சுகின்றார் மொழியின் மகிமையும் பாடலின் பண்பும் கருத்துக்களின் கம்பீரமும் கன்னட கலாசாரத்திலே ஈடுமிணையுமற்றது என்று சொல்லுவது மிகையாகாது."


## —: வாய்வு சூரணம் :—

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வு, கைகால், இடுப்பு வலி, வயிற்று வலிகட்குச் சிறந்தது. (பத்தியமில்லை) 150 கிராம் டின் ரூ. 4—00.

## —: வீரகேசரி மாத்திரை :—

ஜீவசக்தி கனவிலும், சிறு நீரிலும் வெளியாவதைக் கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும், உறுப்புக்கு உறுதியும், இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும். (பத்தியமில்லை) 100 பில்ஸ் ரூ. 25; 50 க்கு ரூ. 13; 24 க்கு ரூ. 7. (மெழுகு ரூ. 4)

தேவைக்கு எழுதவும் :— (பார்ஸல் சார்ச்சு தனி)

பண்டிட் : S. V. R. கண்டர் சன்ஸ் RIMP

தம்மண்ணசெட்டி ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

நேரில் பெற :— (1) அமிர்தலால் அன் கோ, 146 நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை. (2) ராஜா மெடிக்கல் ஹால், தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட் (3) வல்லாராம் நாடார் அன் சன்ஸ், 188-A, தாராவி ரோடு, பம்பாய்-17 (4) சொக்கநாதம் செட்டியார், மருந்துக்கடை, திருப்பாப்புலியூர் (5) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)

# ஸௌந்தர்யலஹரீ

சிவ: சக்த்யாயுக்தோயதிபவதி சக்த: ப்ரபவிதும்
நசேதேவம் நகலுகுசல: ஸ்பந்திதுமபி
அதஸ்த்வாமாராத்யாம் ஹரிஹரவிரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வாகதமக்ருதபுண்ய: ப்ரபவதி

பொதுப்பொருள் :—

"சக்தியோடு கூடிய சிவத்திற்குத்தான் எல்லோருக்கும் ஈசனு யிருக்கும் மகிமை ஏற்படுகின்றது; அப்படியில்லையென்றால் நகரக் கூட சக்தியிருக்காது எனவே நான்முகன், நாரணன், சிவன் முதலிய வர்களால் பூஜிக்கத்தகுந்த உன்னை, புண்யம் செய்யாதவன் எப்படித் துதிக்க முடியும்?" இந்த முதல் சுலோகம் ஸ்ரீ வித்யாதத்துவத்தின அடிப்படையை விளக்குகின்றது. சம்சார பந்தங்களிலிருந்து விடுதலை யையே எல்லோரும் விரும்பினபோதிலும் அதை அடையத்தேடும் வழிகளில் வேற்றுமையுண்டு இந்த நூலுக்கு விரிவுரை எழுதிய காமேச்வர சூரி இந்த சுலோகத்திற்கு மிகவும் விரிந்த விளக்கம் கொடுத்துள்ளார். அதன்படி 14 வித தத்துவார்த்தங்கள் விளக்கம் பெறுகின்றன.

1. வேதாந்தம் :—

சிவமேதான் பரப்பிரம்மம் சக்தியோடு கூடியிருக்கும்பொழுது உண்மையை மறைத்தல் என்ற ஆவரணமும் உண்மையற்றதைத் தோன்றும்படி செய்தல் என்ற விக்ஷேபமும் கூடிய மாயைபரப் பிரம்ம மாகிற சிவத்தோடு கூடியிருக்கும் பொழுதுதான், உலகத்தைச் சிருஷ் டிக்கும் அதிகாரத்தையும் மற்ற எல்லாவிதமானவற்றையும் படைக் கும் சக்தியையும் பெறுகின்றது. இவண் மாயையே சக்தி என்பது பெறப்படுகின்றது. பலகோடி பிறவிகளையடைந்து தெரிந்தும் தெரியா மலும் செய்து சுமந்துகொண்ட பாப மூட்டையை, அறிவு, ஒழுக்கம் பண்பாடு முதலியவற்றை நூற்களிலிருந்து கற்காமலும் நல்ல ஆசா னுடைய அறவுரைகளைக் கேட்காமலும் இருக்கும் மக்களால் தேவி யின் அனுக்கிரஹம் இல்லாமல் களைய முடியுமா? பிறவிப்பயனையே சிந்திக்காமல், உலகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டு, பாப மூட்டையைச் சுமந்துகொண்டிருப்பவர்களுக்கு, தேவியை வணங்க

வேண்டுமென்ற சிந்தனையே இருக்காது. ஈசுவரனுக்கே சக்தியளித்த வளும், படைப்புக்கடவுளாகிய நான்முகனும் காப்பாற்றுங்கடவுளாகிய விஷ்ணுவும் அழித்தற்கடவுளாகிய ருத்திரனும் வணங்கும்படியாக இவற்றிற்கெல்லாம் அப்பாலிருக்கிறவளுமாகிய ஸ்ரீ தேவியே பரம் பொருள்.

2. சாங்கியம் :—

சக்தியே ப்ரக்ருதி; படைக்கும் சக்தி; இது சத்துவ ரஜோ, தமோகுணங்களுடன் கலவுண்டு (Rhythm, Mobility and Inertia) பரஞ்சோதியாய்ப் பரிணமிக்கும்பொழுதுதான், முடமான தன்மையில் அதுவரையிலிருந்த ஈசுவரன் சக்தியோடு கலவையையடைந்து ஆக்கல், அழித்தல் முதலிய பல் வேறுகுணங்களையும் சக்திகளையும் அடைகிறன். மகாபுருஷன் அஹங்காரமற்றவன் என்றெல்லாம் கருதும் படியான தன்மையுமேற்படுகின்றது. நல்ல படிப்பால் வளர்ந்த அறிவு, கபிலர் போன்ற சிறந்த குருவின் அனுக்கிரகம் கிட்டாததினால் தேவியின் சத்துவகுணத்தை அடையாத பாவ மூட்டையைச் சுமக்கும் மனிதர்களுக்குத்தேவி சுலபமாயடையக் கூடியவளாவாளா? ஏ மகா தேவியே! தங்களது கணவனை எவ்விதமாகவும் பாதிக்காத முறையில் தங்களிடம் பரிணமிக்கும் ஆதார சக்திகளின் பெருமையாலல்லவோ பிரமன், விஷ்னு, சிவன் போன்றவர்கள் தங்களை வணங்குகின்றனர். தங்களுடைய குணங்களில் தாமதத்தை நான்முகனும், சத்துவத்தை விஷ்ணுவும் ரஜோகுணத்தைச் சிவனும் அடைந்து தங்களது அருளால் அவரவர்கள் வேலையில் இயங்குகின்றனர். இது தான் சாங்கியத்தின் அடிப்படைத்தத்துவம்

3. ஸ்ரீ வித்யா :

ஹிமவானுடைய பெண்ணான ஹைமவதீ சிவனுடைய மடியில் இருப்பைப்பெற்று (கலந்து) அவனுக்கு சர்வ மங்களமான குணங்களை யளிக்கின்ருள். இப்பேற்பட்ட சிவனிடத்திலிருந்து பவம் (படைப்பு), ம்ருது, (காப்பு), ஹரம் (அழிப்பு) முதலிய தொழில்கள் உற்பத்தியாகின்றன. கைலாசமலையில் ஸ்ரீ சக்கரத்தின் நடு மத்தியில் (inner-most core) வசித்துக் கொண்டே சகல உலகையும் படைத்து விடுகிறாா். இப்பேற்பட்ட கலவையில்லாவிட்டால் முப்புரமெரிப்பதோ ஹாலகால விஷத்தையுண்பதோ நிகழ்ந்திருக்க முடியாது மும் மூர்த்திகளும் வணங்கும் தங்களது சரண கமலத்தை பாபாத்மாக்களால் சிந்திக்க முடியுமா?

4. குறிப்பான வார்த்தைகள் :—

சக்தியும் சிவமும் ஒன்ருய் சேர்ந்து "அ" "இ", "ஐ", "அ" முதலிய உயிரெழுத்துக்களின் பிரஸ்தாரத்தை (permutation) யும்

இதனுலேற்படும் மங்களத்தையும் உலக நலத்திற்காகப் பரிமளிக்கச் செய்கின்றது. இல்லையேல் இந்த வார்த்தைகளுக்கு அவ்வளவு கௌரவமேற்பட்டிருக்க முடியாது. எனவே சகலபாபங்களும் தீரு வதற்காக மும்மூர்த்திகள் வணங்கும் தேவியின் பாதார விந்தங்களைப் பாவிகளும் வணங்குவது மிகவும் அவசியம்.

5. ஷடி வார்த்தைகளின் பெருமை :—

சக்தியோடு ஐக்கியம் பெற்ற சிவமே எல்லோருடைய மனங் களையும் கவரும் நிலையை அடைகின்றது. அப்படியில்லையென்ருல் பாவமற்ற கருத்துப்போலாகும் (expressionless thought). கருத்துப் படிவங்களோடு இணைந்துள்ள சிவமே சிறந்ததாகும் அதைத்தான் எல்லோரும் கருத்திற்கொள்ள வேண்டும். அதனுல தான இப்பேற் பட்ட சக்திவாய்ந்த தேவியைபிரம்மாதிதேவர்களேவணங்குகின்றனர்.

6. சப்தவிபாகம் :—

பராசக்தியுடன் பிணைந்த சிவமே சப்தப்ரம்மமாகிறது ஒரே மூர்த்தியானுலும் அடியார்கள் பலவாருகத்துதிக்கின்றனர். சாக்தர் கள் சக்தியென்றும் சைவர்கள் சித்தென்றும், யோகிகள் குண்டலினீ என்றும், சாங்கியர்கள் ப்ரக்ருதி என்றும் வேதாந்திகள் பரப்பிரம்ம மென்றும், பௌத்தர்கள் புத்தரென்றும், ஜாதிவாதிகள் மகாசத்தா வென்றும், திரவ்யவாதிகள் திரவியமென்றும், இப்படி பலவாருக சிவசக்தியை வர்ணிக்கின்றனர். மாயா சக்திதான் அடியார்கள் விரும்பும் உருவங்களையேற்று அவர்களை ஆனந்திக்கச் செய்கின்றது. சப்தமாகப் பரிணமிக்கும் பொழுது பரை, பச்யந்தீ, மத்யமை, வைகரீ என்ற படிவங்களையெய்துகின்றது. சிவசக்தியில்லையென்ருல் சப்தமும் அர்த்தமும் சேர்ந்து பராசக்தியாகி சப்த நாண்கள் மூலமாய் ஆதார சக்தியைத் துதிப்பது அரிதாய் விடும். (இதற்குமுன் வெளிவந்த மலர்களில் பரை, பச்யந்தீ, மத்யமை, வைகரி ஆகிய சப்த விபா கங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. "மிடற்றுப்பயிற்சி" என்ற தலை யங்கத்தின் கீழும் ஒருவாறு விளக்கம் பெற்றுள்ளது. இனியும் சப் தத்தைப் பற்றிப்பிரத்தியேகமாய் வரும் கட்டுரைகளில் இன்னும் அதிகவிவரம் பெறப்படும்.

7. யந்த்ரம :—

ஸ்ரீ சக்கரத்தை யந்த்ர ரூபமாக அமைத்து முக்கோண வடிவு களில் பிந்து சக்தியோடு சேர்ந்து பலவிதப் பிரஸ்தார கோணங்களை யுண்டு "பண்ணி அதில் எண்மடல், ஷோடசமடல் முதலிய தாமரைப் பூக்களையும் இணைத்துவிட்டால் சக்தியுடன் சேர்ந்த சிவம் மிகுந்த பலம் பெற்றுவிடுகிறது. தந்தரங்கள் மூலம் வழிபடுவது ஒர் பிரத்தி

யேக முறை, யோகம், தியானம் முதலிய முறையில் காணமுடியாத பலன்களைத் தந்த்ர பூஜை மூலம்சீக்கிறமாகவும் எளிதிலும் அடையலாம்.

8. ப்ரணவம் :—

சக்தியும் சிவமும் ஐக்கியப்பட்டு ப்ரணவஸ்வருபத்தையடைகிறது. இது நாதப்பிரம்மத்தின் அடிப்படைத் தத்துவம். இதிலிருந்து சுரங்கள், வர்ணங்கள், பதங்கள், வாக்கியங்கள் முதலியவை படிப்படியாயபிவிருத்தியடைகின்றன. பிறகு உதாத்த, அனுதாத்த, ஸ்வரித, ப்ரசய முதலிய சப்த விபாகங்களாகப் பரிணமிக்கின்றது. இதிலிருந்து ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் அடைகிறது.

9. மாத்ருகை:—

6 நித்ய சக்திகள் 16 ஸ்வரபேதங்கள், 35 மெய்யெழுத்துக்கள், 36 தத்துவங்கள இவையெல்லாம் சிவசக்தி ஐக்கியத்தின் பலனே. இவைகளே கிரமமாக வேதபுராணங்களாக விரிவு பெறுகின்றன.

10. காதிவித்யா:—

15 மாத்திரைகள் 16 மாத்திரைகள் முதலிய காலப்பிரமாணங்கள் கொண்ட மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு பஞ்சதசாக்ஷரீயாகப் பூர்த்தியடைந்து சூரிய சந்திரர்களாகப் பிரகாசிக்கின்றன. இவையே உலகமனைத்தையும் வியாபித்து சப்தமயமாகவும் பரப்பிரம்ம மயமாகவும் செய்து விளங்க வைக்கின்றது.

11. ஹாதிவித்யா :—

அக்ஷரம், தேவதை, ப்ருத்வி, பீஜம் எழுத்து, கலை, வாயு முதலிய தன்மாத்ராகாலங்களாக சிவசக்தி பிரகாசிக்கின்றது. அகத்தியரின் மனைவியாகிய லோபாமுத்திரை ஹாதிவித்யா மூலமாக பஞ்சதசாக்ஷரி ரூபத்தைத் துதித்ததாகப் புராணம் கூறுகிறது. இதுதான் காலக்கிரமத்தில் தக்ஷிணாமூர்த்திஸம்ஹிதையாகிறது. சிவனுடைய பலவித ரூபபேதங்களில் தக்ஷிணாமூர்த்தி ரூபம் மிகவும் மங்களகரமானது.

12. பஞ்சதசாக்ஷரீ :—

சிவாயநம:, நமச்சிவாய முதலியவற்றின் பிரஸ்தாரக்கிரமத்தில் சிவசக்தியை பலவேறு கோணங்களில் பூஜிக்கிறோம்; லயித்துக்காணகிறோம். சக்தி பூஜாக்கிரமத்தில் பஞ்சதசாக்ஷரீ முக்கியமானது. (இது பிறகு சங்கர்ப்பத்தில விளக்கப்படும்.) சிவமும் சக்தியும்

சேர்ந்து பஞ்சதாசக்ஷரீயாகி மந்திரரூபமாக உச்சரித்துச் சித்திபெறும் நிலையை அடைகிறது.

13. குரு:—

குருவின் கருணையால் சக்தி சிவம் கலந்து பரமேச்வர ரூபத்தை அடைகிறது இது ஸ்ரீ வித்யாமந்திரத்தின் சிகரமாகும். குருகடாக்ஷமில்லையென்றால் சிஷ்யனுக்குச் சக்தி வராது என்பது ஆன்றோர்களின் அனுபவம்.

14. சந்திரகலை:—

சிவசக்தியில் சந்திரகலையிலுள்ள தர்சம், த்ருஷ்டம் முதலிய கலைகள் விருத்தியடைந்து குறைந்து மறுபடியும் வளர்ந்து தேய்கிறது இதில் எத்தனையோ தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. சந்திரகலை 1, 2. என்று விருத்தியடைந்து 16—வது கலையில் பூர்த்தியடைந்து பூர்ணிமையாகிறது. இப்பொழுதுதான மும்மூர்த்திகளும் வணங்கும் தன்மை அமைகிறது.

யாமளாஷ்டக தந்தரங்களில் ஒன்றாகிய பைரவதந்திரத்தில் இன்னும் கொஞ்சம் நுட்பமாக விளக்குகின்றார். பிந்து. அஷ்டதளம், ஷோடசதளம். பூக்ருஹம் இவைகள் தாம் சிவமாகின்றன. த்ரிகோணம், அஷ்டகோணம் அந்தர்தசாரம், பஹிர்தசாரம், சதுர்தசாரம் ஆகியவை சக்தியின் அம்சங்கள். இவர்களுடைய மதப்படி ஸ்ரீ சக்கரந்தான் உலக உற்பத்திக்கே காரணம் வாமகேசுவரதந்திரம் என்ற நூலில் சக்தியில்லையென்றால் சிவம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. தேவீபாகவதத்தில் (குண்டலினீ) சக்தியற்ற சிவம், சவம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு விரிவுரை எழுதிய அச்சுதானந்தர் என்பவர் படைப்புக்கு வேண்டிய முக்கிய சக்திகளாகிற இச்சை, ஞானம், க்ரியை முதலிய மூன்று சக்தியிலிருந்து வியாபித்து ஹரி, ஹரன், விரிஞ்சியாக விளங்குகின்றன. வேதமந்த்ரங்களில் முக்கியமான ப்ரணவத்தால் சக்தி பூஜிக்கத்தகுந்தவள். "தத்வமஸி" (அதுதான் நீ) என்ற உண்மையை அறிவதற்கு "ஸோஹம்" (அதுவேநான்) என்பது ஒன்றுக்கொன்று விளக்கம் பெறுகிறது. சிவமும் சக்தியும் உயிர்மெய்யெழுத்துகளாகக் கருதப்படுகின்றன. இவைகளுக்கு அக்ஷரங்கள் (அழிவற்றவை) என்று பெயர்.

இந்த முதல் சுலோகத்தை விளக்கக் கைவல்யாச்ரமர் சில கடினமான கருத்துக்களைக் கையாண்டிருக்கிறார். அவற்றை ஒருளவு நமக்கு புரியும்படி அடுத்த இதழில் விளக்குகிறேன்

# இசைக்கலைச் சொற்கள்

## சுருதிகள் - ஸ்வரங்கள் :—

காதால் கேட்டு வேற்றுமைகளை உணரக் கூடிய சப்தப்பகுதிகளுக்கு சுருதி என்று பெயர் பலவித உணர்ச்சிகளுள் ஓசையுணர்ச்சி சிறப்புடைதது. பூதநூல்களில் ஓசைகளி இலக்கண்ணத்தையும் அவை செய்கைப்படுத்தும் முறைகளையும் காண்கின்றோம் சில ஓசைகள் மிகவும் குறைந்த அதிர்வெண்களையும் சில ஓசைகள் மிகவும் அதிக அதிர்வெண்களையும் கொண்டிருக்கின்றன. ஓசைகளின் அதிர்வுகளைப் பற்றி இதற்குமுன் ஓர் "தமிழிசை" மலரில் விளக்கியுள்ளேன். அதிக இடைவெளியும் குறைந்த இடைவெளியும் இல்லாமல் ஒரே கணக்கான இடைவெளியுள்ள ஓசைகள்தான் இசையோசைகளாகின்றன (musical sounds) இசை ஓசைகள் ஸ்ருதி, கனம், திறம் முதலிய பாகுபாடுகளை உடையவை. ஸ்ருதிதான் முக்கியமானது. எண்ணற்ற சுருதிகளிருக்கின்றன. ஆனல் இசைக்கு எவை பயன்படுகின்றனவோ அவற்றைத்தான் நாம் எடுத்துக் கொள்ளுகிறோம். கேட்கக் கூடிய தன்மையற்ற மிகவும் குறைந்த ஓசையையும் கேட்கமுடியாத அதிக ஓசையையும் நீக்கி விட்டு எஞ்சிய பயனளிக்க வல்ல சுருதிகளைத்தான் இவண் உபயோகிக்கிறோம். எனவே இனிமையை அடிப்படையாகக் கொண்டவற்றையும் எந்தெந்த சுருதிகளைச் சேர்த்தால் இனிமை பயக்குமோ அவற்றைத்தான் நாம் இங்கு கவனிக்கிறோம். இசைக்கணித வல்லுநர்கள் ஸ்ருதிகளின் எண்ணிக்கையை 22 என்று நிர்ணயித்திருக்கிறார்கள் (இவற்றை "சுருதிகள்" என்ற தனித்தலையங்கத்தில் விவரமாய் விளக்கப்படும்.) கலைச்சொல் என்ற முறையில் சுருதி என்றால் என்னவென்பதை மாத்திரந்தான் இங்கு விளக்கியுள்ளேன். இசையின் பயன்படும் ஓசை; இனிமையுள்ள ஓசை; ஓர்கணிதமுறையில் கட்டுப்பட்ட ஓசை ஆகியவற்றைத்தான் சுருதி என்கிறோம்.

எவ்வளவோ சுருதிகளிருந்தாலும் இசையில் உபயோகிக்கப்படுபவை 22 ஆகும் இவற்றில் இராகம், பண் முதலியவற்றை அமைப்பதற்கு எவை பயன்படுகிறதோ அவற்றை சுரங்கள் என்

அழைக்கிறோம். 22–ல் 7 தான் இராக அமைப்பிற்குப்பயன்படுகின்றன. வேதகாலத்தின் தொடக்கத்தில் 4 சுரங்களிருந்ததாகவும் பிறகு அவை படிப்படியாக உயர்ந்து 7 ஆயினவென்றும் கிரந்த கர்த்தாக்கள் கூறுகின்றனர். உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்ற நான்கு சுரங்கள் முதலிலிருந்தனவென்றும் பிறகு அவற்றுடன் ப்ரதமம், க்ருஷ்டம், அதிஸ்வர்யம் என்ற 3–ம் சேர்ந்து 7 ஆயின என்பது இசைவல்லுநர்களின் கருத்து. ஆனால் நமது பாரதத்தைப் பொருத்தமட்டில், மற்றைய நாடுகளில் 7 சுரங்கள் அபிவிருத்தியடைவதற்கு முன்பே இங்கு 7 சுரங்கள் வழக்கத்திலிருந்தனவென்று அயல்நாட்டு சரித்திரவாசிரியர்கள் கூறியுள்ளனர். உதாரணம் அரேபியா, பாரசீகம், யவனம் முதலிய நாடுகளில் 4 சுர சங்கீதம் இருந்த காலத்தில் தான் மகா அலெக்சாண்டர் நமது நாட்டின்மீது படையெடுத்துவந்தான். அயல் நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டு நமது நாட்டிற்கு வந்தான். இவனது போரையும் வீரத்தையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்த தக்ஷசீலத்து அரசனாகிய அம்பி என்பவன் பயந்து யுத்தத்திற்குப்போகமுடிவு செய்யவில்லை. பூர்ணகும்பத்துடன் வணங்கி அலெக்சாண்டரை வரவேற்று உபசரித்தான். இசைவினிகைகளும் நிகழ்ந்தன. அதுவரை 7 சுரங்களோடு கூடிய இசையைக் கேட்டிராத அலெக்சாண்டர் மிகவும் பெருமிதங் கொண்டு சில இந்திய இசை வல்லுநர்களைத்தன்னுடன் அழைத்துச் சென்றான். வழியில் பாபிலோனியாவில்அலெக்சாண்டர் காலகதியை அடைந்துவிட்டபோதிலும் நமதுநாட்டு இசைவல்லுநர்கள் யவனம், பாரசீகம் முதலிய நாகடுளில் பாடிப்புகழடைந்தனர் அரேபியாவுக்கும் சென்று வினிகை நிகழ்த்தலாயினர். இதைக்கேட்டு அகமகிழ்ந்த காலிபு இன்னும் அதிகமாக இந்திய சங்கீதத்தைக் கேட்க வேண்டுமென்றபேரவாக்கொண்டான். ஒரு தூதுக்குழுவையும் இந்தியாவுக்கு அனுப்பினன். அவன் வேண்டுகோளின்படி இங்கிருந்து 10,000 இசை வல்லுநர்கள் (lurians) பாக்தாதுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்கள் அங்கு சென்று 4 சுரமுள்ள இசையை 7 சுரமுள்ள இசையாக மாற்றி அமைத்துள்ளனர். அங்கேயே தங்கி, கலப்புத்திருமணம் செய்து கொண்டு நமது இசையும் அரேபியா இசையும் கலந்த கலவையிசையைக் (metamorphosed music) கையாண்டுவந்தனர். பிறகு கஜினி முகமது இந்தியாவைப் படையெடுத்து வந்தபொழுது கலவையிசைபாடும் வல்லுநர்கள் நமது நாட்டிற்கு வந்து வடநாட்டிசையை மாற்றி ஹிந்துஸ்தானி சங்கீதம் என்ற பெயரையிட்டனர், (Vide A. F. Rahamin – The Music of India)

சுரங்கள் 4 ஆக இருந்து விருத்தியடைந்து 7 ஆக மாறியுள்ளது. இந்த 7 சுரங்கள்தான் இராகங்களுக்குப் பயன்படுகின்றன. இவை 7–ம் பெரிய சுரங்கள் (Major Swaras) இவை இன்னும் பல

பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு (Chromatic notes) சுரக்கலவை முறையில் பல இலட்சம் இராகங்களையுண்டுபண்ணியிருக்கின்றன. 7 சுரங்கள் 16 சுரங்களாக, 16 சுரங்களுக்கு 12 சுரஸ்தானங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவைதான் மேளகர்த்தாராகங்களும் ஜன்ய ராகங்களும் ஏற்படுத்துவதற்குதவுகின்றன. இவற்றைத்தவிர இனிமையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு அனுசுரங்கள் என்ற நுட்பமான (microtones) சுரங்களைக் கையாளுகிறோம். இசையிலுள்ள இனிமைக்கு இவையே தக்ககாரணமாகும்.

சுரங்களை உபயோகிக்கும் முறைதான் மிகவும் முக்கியமானது. சிலசுரங்களை மேல் நோக்கியும் சிலவற்றைக் கீழ் நோக்கியும் சிலவற்றை நீளமாகவும் இன்னும் சிலவற்றை அகலமாகவும் மற்றும் சிலவற்றை ஆழமாகவும் கனம்கொடுத்தும் கனமற்றும், லேசாகவும், மெல்லியதாகவும் இப்படிப்பலவாறுக அசைக்க வேண்டியிருக்கிறது. இன்னும் ஒரு பிரதான சுரத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள நுட்ப சுரங்களை (அனுசுரங்களை) அசைத்துப் பிரதான சுரத்திற்கு உயிர் கொடுக்கவெண்டிவருகின்றது. இணை, கிளை, நட்பு, பகை (வாதி-சம்வாதி, அனுவாதி, விவாதி, Sonant, Consonant, assonant and dissonant) என்ற ரீதியில் சுரங்களை உபயோகித்து அழகு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களுண்டு. அதாவது 1:4, 1:5, 1:7 என்ற ரீதியில் சேரும் சுரசேர்க்கைகள் கேட்பதற்கு இனிமை பயக்கும்; மற்ற ரீதிகள் பகையே; ஆகையினுல் அவைகளின் சேர்க்கை இனிமையிராது.

சுரங்கள், சுத்தசுரம், விக்ருதம், அவிக்ருதம் வக்ரம், க்ரமம் என்ற வேற்றுமைகளையுமடைகின்றன. கலப்பற்ற—மற்ற சுரங்களின் சேர்க்கையற்ற சுரங்களை, அதாவது பிரிவினையற்ற ரிஷபகாந்தார மத்யமதைவத நிஷாதங்களைச் சுத்த சுரங்கள் என்கிறோம். விக்ருதம் என்றுல் பிரதான சுரம் பலபிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. ரிஷபம், சுத்தரிஷபம், சதுஸ்ருதி ரிஷபம், ஷட்ஸ்ருதி ரிஷபம் என்று ஸ்தூலமாகவும், ஏகஸ்திரு, த்ரிஸ்ருதி, பஞ்சஸ்ருதி ரிஷபங்கள் என்று சூட்சுமமாகவும் பிரிக்கப்படுகின்றது. இராகங்கள் பொதுவாக அமைப்பதற்கு முதன் மூன்று ரிஷபங்களே பயன்படுகின்றன என்று கருதிய போதிலும் சூட்சுமபேதங்களும் வழக்கத்திலிருக்கின்றன. ஏக சுருதி ரிஷபம், தோடிக்கும் த்ரிஸ்ருதி ரிஷபம் சாவேரிக்கும் பஞ்ச ஸ்ருதி ரிஷபம் அசாவேரிக்குக்காந்தாரமாகவும் வருகின்றன. காந்தாரம் சுத்த, சாதாரண, அந்தர காந்தாரங்களாகவும், அந்தர்கத, ச்யுதமத்யம காந்தாரங்களென்று சூட்சுமமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. சுத்த காந்தாரம் வராளியிலும் சாதாரண காந்தாரம் தோடியிலும் அந்தர காந்தாரம் மாயாமாளவ கௌளத்திலும், அந்தர்கத காந்தாரம் ஆரபி

யிலும் ச்யுதமத்யம காந்தாரம் கல்யாணியிலும் வருகின்றன. இதே போல் சுத்தமத்யமம் தோடியிலும் சற்று அதிகமான சுத்தமத்தமத்ய மம் சாவேரி, பேகடாபோன்ற இராகங்களிலும் பிரதிமத்தியமம் வராளியிலும் சற்று அதிகமான பிரதிமத்யமம் கல்யாணியிலும் வருகின்றன. இதேபோல் தைவத நிஷாதங்களிலும் ஸ்தூல சூட்சுமபேதங்கள் வருகின்றன; அவை வழக்கத்தில் பல இராகங்களில் பிரயோகிக்கப் படுகின்றன. சுரங்களில் அனேகவிதமான பேதங்களும் அவைகளுக்கேற்ற பிரயோகங்களும் இராகபேதப்பாகுபாடுகளும் இருக்கின்றன. சுருதிகளிலிருந்து சுரங்களும் சுரங்களைக்கொண்டு இராகங்களும் பிரஸ்தார முறையில் பேணிவளர்க்கப்பட்டுள்ளன.


தந்தி : "அம்ருதம்" போன் : 26006

P. O. NO. 1382

**தி ஆரிய வைத்திய பார்மஸி**
**(கோயமுத்தூர்) லிமிடெட்**

தலைமை ஆபீஸ்: 366 திருச்சி ரோடு கோயமுத்தூர்-18.

(உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்)

கோயமுத்தூர் கிளை:

ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில் கோயமுத்தூர்-18

மற்ற கிளைகள் :

புது டில்லி-5, மதராஸ்-14, கள்ளிக்கோட்டை-1, கள்ளிக்கோட்டை-2, திருச்சூர்-1, எர்ணுகுளம், கொச்சின்-1, பாலக்காடு பொன்னனி, கண்ணனூர், ஆலத்தூர், கஞ்சிக்கோடு.

பாக்டரி:
கஞ்சிக்கோடு (போன் : 2)
கேரளா.

நர்ஸிங்ஹோம் :
ராமநாதபுரம்
திருச்சி ரோடு, கோவை-18.
(போன் : 22134)

ஆரியவைத்தியன் :
**P. V. ராமவாரியர்**
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# அரங்கேற்று காதை - பலவகைக்கூத்து

அரங்கேற்று காதையில் ஆடலாசிரியனமைதி கூறுமிடத்து பல வகைக்கூத்தினிலக்கணம் வகுக்கிருர் இளங்கோ அடிகள். இப்பல திறப்பட்ட கூத்துகளெல்லாம் புகழ்ச்சி, நகை, விநோதம் முதலியவை தோன்றும் பலவகைக் கூத்துக்களாகும். தெய்வ சந்நிதிகளில் தெய்வங்களைத்திருப்தி செய்வதற்காக எடுக்கும் வகைகளையும் மார்க்கம் என்றும் ஏனையோர் கண்டுகளிக்க ஆடும் கூத்து தேசி என்றும் கருதப் படுகிறது. சத்துவ, ராஜஸ, தாமஸ குணங்களையுணர்த்துவது அக மாகும். வடமொழியில் சுத்த நிருத்தம் எனப்படுவதுதான் ஈண்டு சொர்க்கம் என்று விளக்கப்படுகின்றது. கதை தழுவி நடிக்கப்படுவது நாடகக் கூத்து அல்லது சாந்திக்கூத்தாகும். சாந்திக்கூத்து நால்வகைப்படும். விநோதக்கூத்து ஏழுவகைப்படும் ஒன்பதின்மர் கலந்து கைகோத்துக்கொண்டு, வெற்றிப்பாக்களைப்பாடிக் கொண்டு, குரவையாடுவது மரபு. தலையில் கரக மேந்தி குடக் கூத்தாடுதல், நகைச்சுவைகொண்ட வகைக்கூத்து. வெறியாட்டம் என்றும் சாமியாட்டம் எனக் கூத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றுடன் இடம், பொருள் ஏவல்களுக்குத் தக்கபடி பல வகைப்பட்ட கூத்துக்களையெல்லாம் ஆடலாசிரியனறிந்திருக்கவேண்டும்.

நாடகங்களிலாடப்படுவது நாட்டியமாகும். தாளத்தை யனுசரித்து ஆடுவது நிருத்தமாகும். ரஸம் முதலிய உணர்ச்சிகளுக்கேற்ப ஆடுவது நிருத்தியமாகும். இவற்றைப்பற்றி நந்திபகவான் அருளிச்செய்ததாகக் கருதப்படும் அபிநயதர்ப்பணம் என்னும் நூலில் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. சுகுமாரமாக நடிப்பது லாஸ்யம்: எழுச்சியுடன் நடிப்பது தாண்டவம். பெரும்பாலும் தாண்டவம் ஆண்களாலாடப்படும். வீரரஸம் மிகுந்தது; பாட்டுடனும் கூடியது. இதுவும் பல வகைப்படும். ஆனந்தத்தாண்டவம் இன்பத்தைககாட்டும். மாலை வேளையிலாடுவது சந்தியாதாண்டவம். பார்வதியும் பரமசிவனும் சேர்ந்தாடுவது உமாதாண்டவம். இவற்றுடன் சிவகௌரி தாண்டவம், காளிகாதாண்டவம், திரிபுரதாண்டவம், ஸம்ஹாரதாண்டவம் என பல்வகைத் தாண்டவங்களுண்டு காதற்சுவை நிறைந்துள்ளதுதான் லாஸ்ய நடனம்; இதில் கலைச்சுவையும் ததும்பி

நிற்கும். மெய்யன்பர்கள் பலருடன் கூடிக் கண்ணன் ஆடியதை ராஸ லீலே என்பார்கள்.

உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கூத்துக்களில் வென்றி, வசை, விநோதம் முதலியவை முக்கியமானவை. இவற்றில் பாட்டின் உறுப்புகளுக்கேற்றபடி பாவஞரஸத்தைப் புணர்த்தவேண்டும். இப்பேற்பட்ட உறுப்புகள்தாம் விலக்குறுப்புகள் எனப்படும், இவை 14 ஆகும். பாட்டுகளுக்கு வரும் பலவித விலக்குறுப்புகள் வேந்து விலக்கு, படைவிலக்கு, ஊர் விலக்கு முதலியவை முக்கியமாகும். தலைவனது கதையை விலக்கியும் நடாத்தியும் முன்பு செய்த கதைக்கே உறுப்பாகவும் ஆகும் என்றுங்கூறுவர். விலக்குறுப்புகள்:-

1) பொருள், (2) சாதி (3) யோனி (4) விருத்தி இவை ஒரு வகை:— (5) சுவை (6) குறிப்பு (7) சத்துவம் (8) அபிநயம் இவை நான்கும் ஒரு வகை. (9) சொல் (10) சொல்வகை (11) வண்ணம் (12) வரி இவை நான்கும் மற்றொருவகை (13) சந்தி (14) சேதம் இவையிரண்டுமொருவகை. இவற்றிலும் பாகுபாடுகள் (permutation and Combination) உண்டு அறம் பொருள், இன்பம், வீடு என பொருள் நால்வகைப்படும். இவை குறைந்தும் கூடியும் நாடகத்தில்வரும். அப்பொழுது சந்தர்ப்பத்திற்கேற்ப முதல், இரண்டாம், மூன்றும், நான்காம் அறம் என வேறுபட்டு வரும். இவையே அந்தணர் முதலிய நான்கு சாதிகளாகவும் கூறப்படும். பொருள் தோன்றுமிடம் யோனியாகும் உள்ளவர்க்குள்ளது, இல்லவர்க்கில்லது உள்ளவர்கதுளது இல்லவர்க்குள்ளது என்ற கற்பனைகள் யோனியிலடங்கியவை. நாடகத்தின் தன்மை விருத்தியாகும். சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி என விருத்தி நால்வகைப்படும். அறம், பொருளாகத் தெய்வமானிடர் வருவது ஆரபடியாகும். காமம் பொருள்படுவது கைசிகி; இதில் மக்கள் தலைவராக வருவார். கூத்தன் தலைவனுக வருவது பாரதி; இதில் நடன், நடி பொருளாகக் காட்டப்படுவார்.

சுவை ஒன்பது – வீரம் அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சமநிலை மனத்துட்பட்டது உள்ளத்தே நிகழ்வது குறிப்பாகும். உள்ளத்தில் நிகழ்வதற்கேற்ப உடம்பில் நிகழ்வது சத்துவமாகும். மயிர்ச்சிலிர்த்தல் கண்ணீர்வார்த்தல், நடுங்குதல், வியர்த்தல், தேற்றம், களித்தல், வழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்று சத்துவம் பத்து வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒன்பான் சுவைகட்குரிய அவிநயங்களை விளக்குவாம்.

வீரம் :—

கண்டமாத்திரத்தில் பகைவர் அஞ்சவேண்டும். சொற்கள் திண்ணென்றிருக்க வேண்டும். கையில்வாளேந்தி, புருவம்முரிந்து, கணகள் சிவந்து, உதடு மடிந்து, நுதல் சுருண்டு, வெயிறு சுடிந்துமிருக்கவேண்டும்.

அச்சம் :—

உடம்பு ஒடுங்கி, நிலை நடுங்கி, கண்மலங்கி, உளம் கலங்கி, சுாந்து வரலுடைமையுங்கையெதிர் பறுத்தலும் நோக்கமும் பரந்துமிருப்பது இயல்பு.

இழிப்பு :—

கண் இடுங்கியிருத்தல், யெயிறு புறம்போதல், முகம் ஒடுங்குதல், யாக்கைசோர்ந்திருத்தல் ஆகியவை இவ்வபிநயத்தின் அறிகுறிகளாம்.

அற்புதம் :—

சொற்களில் சோர்வு, சோர்ந்தகை, மெய்ம்மயிர்க்குளிப்பு, நூதனவிழி முதலியவை அதன் அங்கங்கள்.

காமம் :—

தூவுள்ளுறுத்த வடிவுந்தொழிலும், காரிகை கலந்த கடைக்கணும், மலர்ந்தமுகனும் இரந்தமென்கிளவியும் இவ்வபிநய வகையால் விளக்கம்பெறும்.

அவலம் :—

கவலை நிறைந்தகண், வாடிய நீர்மை, வருந்திய செலவு, பீடழியிடும்பை, பிதற்றியசொல், நீர்மையில்கிளவி, பொறையின்ருகல் ஆகியவை இவ்வபிநயவகையிலடங்கியவை.

வெகுளி :—

கைபிசையா, வாய்மடியாக்கண்சிவவாவெய்துயிரா, மெய்குலையா, வேராவெகுண்டெழுதல் இதன் அறிகுறிகள்.

நகை :—

விட்டு முரிபுருவம், செய்வதுபிறிது, மிகைபடுநகை, கோட்டிய முகம் இவற்றுடன் நிகழவேண்டும்

அவிநயம் :—

இதுவரை விரித்த எண்வகையைத் தவிர அவிநயம் என்பதில் இருபத்துநான்கு வகையுண்டு

i வெகுண்டோனவிநயம் :— மடித்தவாய், மலர்ந்த மார்பு, துடித்த புருவம், சுட்டியவிரல், கன்றினவுள்ளம்.

ii மடியனவிநயம் :— மூரிநிமிர்தல், முனிவொடுபுணர்தல், காரணமின்றியாழ்ந்து மடிந்திருத்தல், பிணியின்றியும் சோர்ந்திருத்தல்.

iii களித்தோனவிநயம் :— கவிழ்ந்துஞ் சோர்ந்துந்தாழ்ந்துந் தளர்ந்தும், வீழ்ந்த சொல்லும், மிழற்றிச்சாய்தலும் இதன் இலக்கணமாம்.

iv உவந்தோனவிநயம் :— கண் மலர்ந்திருத்தல், உள்ளமினிதாயிருத்தல், கோபங்கொள்ளாதிருத்தல், இசை கூட்டிமகிழ்தல் முதலியவை ஈண்டுக்கொள்ளற்பாலது.

v அழுக்காறுடையோனவிநயம் :— கூம்பியவாய், கோடிய உரை, ஓம்பாது விதிர்க்கும் கைவகை, வெகுளி, காரணமின்றி மெலிந்த முகம் ஆகியவை இதனங்கங்கள்.

vi இன்பமொடு புணர்ந்தோனவிநயம் :— துவர்த்தயாக்கை, பெருமகிழ்வுடைமை, மயங்கிவந்தசெலவு, இனியசொற்பொலிவுடைமை, எழிலொடுபுணர்ந்த நறுமலருடைமை, கலங்கள் சேர்ந்தகன்ற தோண்மாாபுடைமை முதலியவை விளக்கப்பட வேண்டும்.

vii தெய்வ முற்றோனவிநயம் :— மடித்தெயிறு, கௌவியவாய்த் தொழில், துடித்தபுருவம், துளங்கியநிலை, சேர்ந்த செருக்கு முதலியவற்றை ஆடிக் காட்டுதல்.

viii ஞஞ்ஞையுற்றோனவிநயம் :— இறுகிய நாடுழி, நுரைசேர்ந்து கூம்பும்வாய் பார்ப்பவர்களுக்கு உணர்வற்றவன்போல் தோன்றுதல், விழுத்தகவுடைமை, ஒழுக்கிலாமை, வயங்கிய முகம் முதலியவை இதில் விளக்கப்படுவனவாகும்.

ix சிந்தையுடம்பட்டோனவிநயம் :— பிடித்தகைமேலடைத்தக வின் முடிதலுறுத கருமநிலைமை, சொல்வது யாதும் உணரா நிலைமை முதலியவை இதிலடங்கியவை.

x துஞ்சாநின்றோனவிநயம் :— எஞ்சுதலின்றி மருங்குபுடைமை, மலர்ந்துங்கவிழ்ந்தும்வருபடையியற்றியுமலர்ந்துயிர்ப்புடைமை இதனிலக்கணமாம்.

xi இன்றுயிலுணர்ந்தோனவிநயம் :— ஒன்றிய குறுங்கொட்டாவியும் உயிர்ப்புந்தூங்கிய முகமுந்துளங்கிய உடம்பும் இவண் ஆடிக்காட்டவேண்டியவை.

xii செத்தோனவிநயம் :— வலித்த உறுப்பு. மெலிந்த வகடு, மென்மை மிகவுடைமை, வெண்மணிதோன்றக் கருமணி கரத்தல் இவண் ஆடிக்காட்டப்படும்.

xiii மழைபெய்யப்பட்டோனவிநயம் :— மெய் கூர்நடுக்கம். மெய் பூண்டொடுக்கியமுகம், ஒளிப்படுமன்னிலுலடியகண், விளியினுந்துளியினும் மடிந்த செவியுடைமை, நடுங்கு பல்லொலியுடைமை ஆகிய இல்க்கணமுடையது.

xiv பனித்தலைப்பட்டோனவிநயம் :— நடுக்கமுடைமை, நகைபடுநிலைமை. சொற்றளர்ந்திசைத்தல், போர்வை விழைதல், புந்திநோவுடைமை etc.

xv உச்சிப்பொழுதின்வந்தோனவிநயம் :— சொரியாநின்ற பெருந்துயருழந்து. தெரியாநின்ற உடம்பெரியென்னச் சிவந்த கண்ணும் அயர்ந்த நோக்கமுமுடையது.

xvi நாணமுற்றோனவிநயம் :— இறைஞ்சியதலை. மறைந்த செய்கை. வாடியமுகம், கோடியஉடம்பு. கெட்டவொளி கீழ்க்கண்ணோக்கம் முதலியவை.

xvii வருத்தமுற்றோனவிநயம் :— சோர்ந்தயாக்கை, சோர்ந்த முடி. கூர்ந்தல்வியர்வு. குறும்பல்லுயர்வும். வற்றியவாயும். வணங்கிய உறுப்பும் உற்றவை.

xiii கண்ணோவுற்றோனவிநயம் :— கண்ணீர்த்துளி விரல் தெளித்தல், வளைந்தபுருவம், வாடியமுகம். விழிதருமச்சம் இவற்றை பரவத்தோடு வெளிப்படுத்தவேண்டும்.

xix தலைநோவுற்றோனவிநயம் :— நிலைமையிசறித் தலையாட்டுடைமை, கோடியவிருக்கை. பெருவிரலிடுக்கியநுதல், வருந்தி ஒடுங்கிய கண் இவை இதன் குறிப்புகளாம்.

xx அழற்றிறம்பட்டோனவிநயம் :— அழலும், வெயிலும், சுடரும், அஞ்சலும், நிழலும், நீரும், சேறும், உவத்தலும், இப்பேற்பட்ட துன்பங்கள்புலர்ந்தயாக்கை இவ்வபிநயவிலக்கணமாம்

xxi சீதமுற்றோனவிநயம் :— மீரமாகியபோர்வையுடுத்தல், மாரவெயிலுழந்தழல். முரசியுமுரன்றுமுயிர்த்துமுரைத்தல் பேர்ன்றவை இவ்வபிநயவிலக்கணம்.

xxii வெப்பின் அவிநயம் :— வெம்பியவிழி, நீருண்ட வேட்கை, நிரம்பாவலி இதனிலக்கணமாம்.

xxiii நஞ்சுண்டோனவிநயம் :— பஞ்சியின்வாயிற்பனிநுரை கூம்பலும், தஞ்சமாந்தர்பால் இன்சொலியம்புதல் இதனிலக்கணம்.

( தொடரும் )

---

குறிப்பு : வீணை மேளம் செய்தல்- வீணைபோதித்தல்- வாய்ப்பாட்டு-தென்னாட்டிசை - வட நாட்டிசை முதலியவை போதித்தல் ஆகியவற்றை நமது நாட்டிலேயே இசையில் அதிகப் பல்கலைப்பட்டங்கள் பெற்ற ஆசிரியரே ஏற்றுச் சிறந்த முறையில் பணியாற்றக்கூடும். தஞ்சை வீணை வேண்டுவோரும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

---

# ஸாஹித்யகர்த்தாக்களின் வரலாறு

மௌரியகுப்த அரசர்கள் காலத்திலேயே ஸாஹித்தியகர்த்தாக்கள் இருந்திருக்கின்றனர் என்பது சரித்திர வாயிலாகப்பெறப்பட்டுள்ளது. பௌத்த சமண மதங்கள் நமது சங்கீதக்கலைக்குப்பாதகமாயிருந்ததாகச்சில இசைப்பேரறிஞர்கள் எழுதியிருக்கின்றனர். ஆனால் ஆழ்ந்த ஆராய்ச்சி வேறுவிதமான கருத்துக்களைத் தோற்றுவிக்கின்றது. பௌத்த மதப்பிரசாரத்திற்கு புத்தர்பிரான் வீணையை வாசித்து இசைப்பிரசாரம் மூலம் தமது மதப்பிரசாரத்தைச்செய்தார் என்று அத்யங்தையா போன்ற அறிஞர்கள் எழுதிவைத்திருக்கின்றனர். அசுவகோஷர், புத்தகோஷர் போன்ற பௌத்த நூலாசிரியர்கள் சிறந்த ஸாஹித்யவித்வான்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். புத்தகோஷர் கி. பி. நான்காவது நூற்றுண்டில் வாழ்ந்தவர். கெலாஸமடத்தைச்சார்ந்தவர் கி. பி. 387–ல் தம்மபாலன் (தினிகையாங்) என்ற பௌத்த அரசனால் இலங்கையிலிருந்து வினயபிதகங்கள் சிலவற்றை (Sacred scriptures of the Buddhists)எடுத்துவருவதற்காகப் புத்தகோஷர் அனுப்பப்பட்டார். அவை தெலுங்கிலிமியில் (Telaing Characters) இருந்ததாகத்தெரிகிறது. இவர் பத்ய சூடாமணி என்ற புத்தர் சரித்திரத்தை விளக்கும் நூல் எழுதியிருக்கிறார்.

லலிதவிஸ்தாரம், புத்தசரிதம் என்ற இருநூல்களும் அசுவகோஷராலியற்றப்பட்டவை. இவற்றிலுள்ள புத்த சரித்திரத்தைவிட வேறுபட்டதாகப் புத்தகோஷரின் நூல் இருக்கின்றது. பிம்பசாரப்பட்டணத்தில் மிகவும் கடுந்தவமியற்றிப்பலனடையாத புத்தர்பிரான் சாலக்காட்டில் போதிமரத்தடியில் வீற்றிருந்து சமாதியிலாழ்ந்தார். தேவர்களும் மன்மதனும் புத்தரது தவத்தைக் கலைக்க முற்பட்டனர். பல தேவகன்னிகைகளனுப்பப்பட்டனர். அவர்கள் சிறந்த ஸாஹித்யங்களைப்பாடி ஆடி புத்தரைக்கலைக்க முயன்றனர். அவர்களது ஸாஹித்யங்கள் நெறிதவருது சீரிய முறையிலிருந்தனவென்று புத்தகோஷர் கூறுவதிலிருந்து இசை வலலுநர்கள் ஸாஹித்யங்களை இயற்றியிருக்க வேண்டுமென்று புலனுகிறது. ஆனால் புத்தரது திடசித்தத்தை இவர்களால் கலைக்க முடியவில்லை.

வடமொழியில் மகாகவி என்ற புகழடைந்துள்ள காளிதாஸனின் சமகாலத்தவர் இலங்கையையாண்ட குமாரதாஸன் என்று

சிலர் கருதுகின்றனர். ஆனால் குமாரதாஸன் காலத்தில் வதிந்தவரை பரிமளகாளிதாஸன் என்று சிறந்த ஆராய்ச்சிகள் வெளியிடுகின்றன. நாம் இந்த அபிப்பிராய பேதத்தில் புகாமல் குமாரதாஸனைக்கவனிப்போம். சிலர் இவனைக் குமாரதாதுஸேனன் என்று கருதுகின்றனர். இவ்வரசன் பௌத்த சமயத்தைத் தழுவியவன். அனேக நூல்களை இயற்றுவித்தும் ஆலயங்களைக்கட்டியும் கலை வாணர்களையாதரித்தும் அழியாப்புகழ் பெற்றுள்ளவன். புத்தசங்கங்களில் இசை வல்லுநர்கள் இருந்ததாகவும் அவர்கள் அரசர்களாலாதரிக்கப்பட்டிருந்திருக்கின்றனரென்றும் மகா வம்சம் (அத்யாயம் 41) என்ற நூலிலிருந்து அறிகிறோம். தர்மகீர்த்தி என்ற பௌத்த ஸாஹித்ய கர்த்தா அலங்கார சாஸ்திரத்தை விரிவாக எழுதியுள்ளார்; அதில் நாதத்தைப்பற்றியும் சிறந்த விளக்கம் கொடுத்திருக்கிறார். இவரது பாடல்களைப்பிற்காலத்தியவர்கள் மேற்கோளாகக்கையாண்டிருக்கின்றனர். பௌத்த சங்கதி என்ற நூலில் இசை, ஸாஹித்யம், இசை மேதைகள் போன்ற அத்தியாயங்கள் இருந்ததாகக் கருதப்படுகிறது. அனேக பௌத்த ஸாஹித்யகர்த்தாக்கள் கி. பி ஆறுவது ஏழாவது நூற்றாண்டுகளில் இருந்ததாகத்தெரிகிறது. சங்கீத சாகித்தியத்தில் அவர்கள் நிரம்பிய சிரமத்தை எடுத்துக் கொண்டிருந்தபோதிலும் பிறகு ஏற்பட்ட இந்து—பௌத்தமோதலில் அவைகளில் பெரும்பாலானவை அழிந்துவிட்டதாகக் கருதுவதற்கிடமிருக்கிறது.

கஷ்மீரத்தில் கி பி எட்டாவது நூற்றாண்டில் ஜயாபீடன் என்ற அரசன் அனேக இசைவல்லுநர்களை ஆதரித்திருக்கிறான். அப்புலவர் பெருமக்களில் பெரும்பாலானவர்கள் அலங்கார சாஸ்திரத்தை அவலம்பித்தபோதிலும். அவர்களுடைய காவியங்களில் சங்கீத ஸாகித்யங்கள் நிறைந்திருக்கின்றன. வாமனர், உத்படர், மனோரதர், சங்கதத்தர், சத்கர், சந்திமான் முதலிய வித்வான்களை ஜயாபீடன் ஆதரித்ததாகத் தெரிகிறது. அடுத்த காஷ்மீர அரசன் அவந்திவர்மன் (885—884 A D.) இவனால் ஆனந்தவர்த்தனர் ரத்னகரர், முகதாகணர், சிவசிவாமி முதலிய ஸாஹித்யகர்த்தாக்கள் ஆதரிக்கப்பட்டிருக்கின்றனர். தவனிசம்பந்தமான இயக்கத்தில் ஆனந்தவர்த்தனர் கீர்த்தி வாய்ந்தவர். பல இசைஸாஹித்யங்களையும் இயற்றியிருக்கிறார். ஆனால் இவர்களெல்லோரும் சிறந்த ஸாஹித்ய வல்லுநர்கள் என்று ஆங்காங்கு கிடைக்கும்மேற்கோள்களிலிருந்து தெரிகின்றனவே தவிர' அவர்களது ஸாஹித்யங்களில் பெரும்பாலானவை காலவெள்ளத்தில் சிதைந்துபோய்விட்டன. பார்வதியைத்தோத்தரித்து தேவீசதகம் என்ற இசை ஸாஹிதயம் இயற்றியிருக்கிறார். ஆனந்தவர்த்தனரின் சமகாலத்தவர்தான் காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய சச்சிதானந்தஸரஸ்வதீ என்று குருரத்னமாலீகா கூறுகிறது. பட்டகல்லாடருடைய புதல்வரான முகுளர்

காஷ்மீரசமஸ்தான வித்வானுக இருந்திருக்கிருர். இவர் இயற்றிய பல ஸாஹித்தியங்கள் ஜயதேவ சந்தஸ் மிகவும் முக்கியமானது. இதைமேற்கோளாக அபிநவகுப்தர் தனது நாட்டிய சாஸ்திர விரிவுரையில் கூறியிருக்கிருர். இதே அவந்திவர்மனது அவைக்களப் புலவரான பட்டநாயகர் பரத நாட்டிய சாஸ்திரத்திற்கு விரிவுரை வழங்கியிருக்கிருர். இவர்தான் த்வனியைவிட ரஸம் சிறந்தது என்ற இயக்கத்தை நிலைபெறச் செய்தவர் இந்த நாட்டிய சாஸ்திர விரிவுரையிலிருந்தும் அபிநவகுப்தர் மேற்கோள்களைக் கையாண்டிருக்கிருர்.

இதற்கடுத்தகாலத்தில் தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்கள் பக்திப்பாடல்களைத் தமிழகத்திற்கு வாரிவழங்கியிருக்கின்றனர். இவர்களின் பிரசாரத்தொண்டு (propaganda) மிகவும் போற்றத்தக்கது. ஜைன பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பல்லவர்கள் போன்ற மன்னர்களால் பேணி வளர்க்கப்பட்டன.

''இருட்பாரவினை நீக்கி எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரம் தனிசுமந்த அன்றுமுதல் இன்றளவும்,
மதுவொன்றும் மலரடிக்கீழ் வந்தடைந்தோர்யாவர்க்கும்
பொது அன்றி நினைக்குரித்தோ, புண்ணிய! நின் திருமேனி''

என்பது போன்ற பாடல்களால் பௌத்தர்கள் பரமகருணைவள்ளலாகிய புத்தர்பிரானையும் ஜைனர்கள் மகாவீரனுகிய அருகக்கடவுளையும் பாடிப்பரவியுள்ளார்கள. சைவ வைணவ சமயங்கள் ''மறுமலர்ச்சி' பெற்றுப் புதுப்பொலிவுடன திகழ்ந்ததால் ஜைன பௌத்த சமயங்கள க்ஷீணிககலாயின. மேலும் அவ்விருமதங்களும் பொதுமக்களுடைய இதயத்தோடு கலந்து உறவாடவில்லை. பக்தியுணர்ச்சியுள்ளவர்கட்கு அம்மதங்கள் நாத்திகமாகவே தென்பட்டன நமது இந்து மதக்கொள்கைககு மாருக் ''தாம்வாடவாடத்தவஞ்செய்தவர்கள்'' பௌத்தஜைனங்கள். ஆழ்வார்கள் கூறுவதுபோல் சொந்த உடம்பானுலும் ஹிம்ஸை செய்ய உரிமையிலலை. 'உயிர்களையெல்லாம் ஈச்வரனுகவே காணவேணும்; உடம்பையும் அபபடித்தான் பார்க்கவேணும்'' எனபது இவர்களது கொள்கை பகவானுடைய நாமசங்கீர்த்தனமே எல்லாவற்றிற்கும் மேலானதென்று பத்கர்கள் நம்புகிருர்கள். 'நாவுண்டு, நீயுண்டு நாமம்தரித்தோதப பாவுண்டு; நெஞ்சே! பயமுண்டோ?'' என்று பகதர்கள் எப்படி உறுதி கூறுகின்றனர் பாருங்கள். ஜைன பௌத்தர்களைப்போல் சைவ வைணவர்களும் தாய்மொழியில் பாடல்களை இயற்றி அவை மூலம் பிரசாரம் செய்யலானுர்கள். பண சுமந்த தோத்திரப்பாடல்கள் எப்பேற்பட்ட மனோநிலையை

யும் வசீகரித்துருகவைக்கும் சக்தியுள்ளன. ஆழ்வார்களினுடையவும் நாயன்மார்களினுடையவும் பக்திப் பாடல்தளில் புத்துயிர் பெற்ற நமது மதம் எல்லா மதங்களேயும் வெற்றி கொண்டு புதுப்பொலிவுடன் திகழ்ந்ததென்ருல் அதற்குக் காரணம் கன்னெஞ்சையும் கனிவிக்கக் கூடிய அலிகளுககு ஆண்மைக்கனலேற்றக் கூடிய பயங்கொளிக்கும் வீரக்கனலேற்றக்கூடிய ஆழ்வார் நாயன்மார்களின் பாசுரங்கள்தாம் சைவவைணவம் ஒருபக்திப்ரவாகம்; சமயத்தையும் கலைகளேயும் வளர்த்துத் தமிழகத்தை வளமுறச்செய்தது.

தமிழகத்தில் தமிழ்ப்பாடல்களைச் சுவையுடனும் இசைச்செறிவுடனும் ஏழு நூருண்டுகட்கு முன்னரே தூய்மைப்படுத்தியவர் நிகமாந்தமகாதேசிகனுகும். அவர் பாடிய எண்ணற்ற பாடல்களில் சுமார் 400 பாடல்கள் தற்காலம் நமக்குக் கிடைத்துள்ளது. மொழி நயத்திலும் இசையின்பத்தியிலும் காலப்பிரமாணத்திலும் இணையற்றவை என்றே முன்னுள் அறப்பணித்துணையமைச்சர் திரு. பக்தவத்சலமவர்கள் மொழிந்து அவரது பாடல்களைப்பாடிக் காட்டும்படி அடியேனுக்கும் பணித்துள்ளார். (இது கோவை அரசாங்க விடுதியில் நடந்த சம்பவம். இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளிலும் பிரசுரமாயுள்ளது.) நமது ''தமிழிசை'' மலர்களில் இதற்கு முன் 3 பாடல்கள் சுரசாகித்தியமாய் வந்துள்ளது.

தேசிகனது நாட்டிய நாடகமும் இசைம்பாக்களும் அவற்றின் விளக்கமும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வரும்,

— ஆசிரியர்.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT "TAMIZHISAI"

### Form VI
(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1 | Place of publication | 35, Vivekananda Road, Ramnagar, Coimbatore-9. |
| 2. | Periodicity of publication | Monthly |
| 3. | Printer's name | S. Sivakaruppiah alias Gandhidasan |
| | Nationality | Indian |
| | Address | 14, Senguptha Street, Ramnagar, Coimbatore-9. |
| 4. | Publishers Name | S R. Kuppuswami |
| | Nationality | Indian |
| | Address | "Navaneetham" publication, 35, Vivekananda Road, Ramnagar, Coimbatore-9. |
| 5. | Editor's name | S R. Kuppuswami |
| | Nationality | Indian |
| | Address | "Navaneetham" 35, Vivekananda Road, Ramnagar, Coimbatore-9. |
| 6. | Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital | S. R Kuppuswami, owner "Navaneetham" 35, Vivekananda Road, Ramnagar, Coimbatore-9. |

I, S. R. Kuppuswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) KUPPUSWAMI,
Publisher Tamizhisai, Tamil monthly magazine.

Dated : 1—2—1969.



அடுத்த இதழில் "ஏபலிகோ" என்ற
தியாகராஜரின் அஸாவேரி ராகப்பாடல்
சுரசாகித்தியமாய் வெளிவரும்.

Edited & Published by S. R. Kuppuswami at 35. Vivekananda Road Ramnagar Coimbatore-9. Printed by S. Sivakaruppaiah alias Gandhidasan at his Gandhidasan Achagam 14. Senguptha Road, Ramnagar, Coimbatore-9